||ஹரி ஓம்||

# திருமந்திர மாலை



## அறிதலும் தெளிதலும்

சின்மயா மிஷன், சென்னை

# முகவுரை

---

## ||ஹரி ஓம்||

சென்னை சின்மயா மிஷன், பூஜ்ய குரு தேவரின் 108வது ஜெயந்தி விழாவினை முன்னிட்டு, மக்களின் நன்மைக்காக பல புதுமையான திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது. இவற்றில் முக்கியமான ஒன்று "வித்யா ஞான யக்ஞா".

<u>வித்யா ஞான யக்ஞா:</u>

வித்யா ஞான யக்ஞா என்பது பல ஆன்மீக தலைப்புகளில் குழுக்களை உருவாக்கி, ஒவ்வொரு பாடத்திலும் அந்தந்த குழுவில் உள்ளவர்கள் அந்தந்த பாடத்தில் பாண்டித்தியம் பெற வேண்டும் என்கிற நோக்கத்தில் துவங்கப்பட்டும் செயல்பட்டும் வருகிறது.

இதில் ஒரு முக்கியமான பாடம் திருமூல நாயனாரின் "திருமந்திரம்" ஆகும்.

திருமந்திரம் குழுவில், வாரம் ஒரு முறை ஒவ்வொருவரும் ஒரு மந்திரத்தை எடுத்து, அதைப் பற்றிய ஆராய்ச்சி செய்து, விளக்கம் தரவேண்டும். இதற்கான முறைபடியான செயல்முறை பின்வருமாறு:

1. மந்திரத்தை வாசிப்பது
2. மந்திரத்தின் பத அர்த்தத்தை அளிப்பது
3. கருத்துரையாக வழங்குவது
4. அதற்கான விளக்கத்தை வழங்குவது
5. முடிவுரை கூறுவது

இந்த முறைப்படி கடந்த மூன்று ஆண்டு காலமாக, திருமூலரின் "திருமந்திரம்" பற்றிய விளக்கத்தை எங்கள் சிற்றறிவுக்கு எட்டிய அளவுக்கு, உங்கள் முன்னால் சமர்ப்பிக்கின்றோம்.

# பக்த ஞானி “திருமூலர்” வரலாறு

பகவான் சிவபெருமானின் இருப்பிடமாகிய **"கயிலை மலை"**யில் நந்தியம் பெருமானிடம் உபதேசம் பெற்ற "சிவயோகி" ஒருவர், பொதிகை மலையில் மாமுனிவர் அகத்தியரை காண்பதற்காக புறப்பட்டு, தென்திசை நோக்கி வந்தார்.

பயண வழியில் பல புனித ஸ்தலங்களை தரிசித்தார்.

இறுதியாக, தில்லையில் சிற்றம்பல கூத்தரை தரிசித்து, இறைவனுடைய ஆனந்த தாண்டவத்தையும் காணவேண்டி தங்கி இருந்தார்.

பிறகு, அவ் ஊரின் தெற்கே சாத்தனூர் என்னும் ஊரில் பசுக்களை மேய்த்த 'மூலன்' என்பவன் இறந்து கிடந்தார். அவன் மேய்த்த பசுக்கள் எல்லாம் வருந்தி கண்ணீர் விட்டுக் தவிப்பதை கண்டார்.

அவற்றின் துன்பத்தை நீக்குவதற்காக, அவர் ஏற்கனவே பெற்றிருந்த "பரக்காயப் பிரவேசம்" எனும் 'கூடுவிட்டு கூடு பாயும்' சித்தியை பயன்படுத்தி, மூலனின் உடலில் புகுந்தார்.

அதற்கு முன், தனது உடலை ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்தார். மூலனின் உடலில் புகுந்த பின், பசுக்களின் துன்பத்தை நீக்கி, அவற்றையெல்லாம் மூலனின் வீட்டில் சேர்த்து விட்டு, மூலனோ தன் வீட்டிற்கு செல்லாமல், ஊரில் இருக்கின்ற பொது மடத்தில் அமர்ந்திருந்தார்.

அவரின் நடத்தையில் மாற்றங்களை கண்ட மனைவியும், ஊரின் பெரியவர்களும் சந்தேகத்திற்கு ஆளானார்கள்.

ஊரில் இருக்கின்ற பெரியோர்கள் எல்லாம் அவனின் நிலையை கண்டு, மூலரின் மனைவிக்கு ஆறுதலும் கூறினார்கள்.

சிவயோகி தனது உடலை காணாமல் திகைத்து, தடுமாறும் நேரத்தில் "எல்லாம் இறைவன் அருள்" என தெளிந்தார்.

திருவாவடுதுறையில் உள்ள அரச மரத்தின் நிழலில் பல ஆண்டு "யோகத்தில்" இருந்து 'தமிழ் மூவாயிரம்' எனும் 'திருமந்திரம் மாலை' என்ற நூலை ஆண்டுக்கு ஒரு பாடலாக பாடினார்.

( சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணத்தில் சொல்லப்பட்ட வாழ்க்கை வரலாற்றை இதுவரை பார்த்தோம்)

இனி, திருமந்திரத்தில் அறியப்படும் விஷயங்களை பார்ப்போம்.

கயிலையில் நந்தியம் பெருமானிடம் இந்த சிவயோகியருடன் எழுவர்கள் வேதாகமம் கற்றதாகவும், இந்த சிவயோகியாரின் சிரசின் மீது நந்தியம் பெருமான் பாத ஸ்பர்ச தீட்சை கொடுத்ததாகவும், மூலன் உடலில் புகுந்த பின், இந்த சிவயோகியாரின் உடலை இறைவனே மறைய செய்தார் என்றும், திருவாவடுதுறையில் அமர்ந்து, "நன்கு தமிழ் செய்யுமாறு இறைவன்

பணித்தார்" என்பதற்கு இணங்க திருவாவடுதுறையில் சிவபோதி மரத்தின் கீழ் அமர்ந்து  "வேத ஆகம" நூலை இயற்றினார்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இயற்றப்பட்ட இந்த வேத ஆகமங்கள் இன்றளவும் எல்லோராலும் ஏற்கப்பட்டு, வாழ்வியலுக்கு அவசியமானது என்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பலவகை யாப்புக்கள் இருந்தாலும், திருமூலர் "கலி விருத்த யாப்பை" மட்டுமே பயன்படுத்தி அனைத்து மந்திரங்களையும் பாடியுள்ளார்.

# திருமந்திர நூலின் அறிமுகம்

பக்த ஞானி திருமூலர் எழுதிய திருமந்திரத்தை படிப்பதற்கு முன்னால், சைவ சித்தாந்தத்தை பற்றி ஓரளவுக்கு தெரிந்து கொண்டு, திருமந்திரம் நூலுக்குள் சென்றால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

சைவ சித்தாந்தத்தில் முக்கியமாக பேசப்படுவது மூன்று பொருள்கள் தான். அவை பசு — பதி — பாசம்.

மேலோட்டமாக பார்க்கும் பொழுது வெவ்வேறாக தெரிந்தாலும், ஆழமாக பார்க்கும் போது சுத்த அத்வைத தத்துவத்தை விளக்குகிறது.

பாரதத்தில் சனாதன தர்மத்தில் மூன்று விதமான தத்துவ பிரிவுகள் உண்டு.

1. த்வைதம்: மத்வாச்சாரியார்
   பசு — பதி — பாசம் மூன்றும் வெவ்வேறானவைகள் என்பது இவர்களின் கருத்து.
2. விசிஷ்டாத்வைதம்: ராமானுஜாச்சாரியார்
   பசு — பதி — பாசம் மூன்றும் இறைவனின் அங்கங்கள் என்பது இவர்களின் கருத்து.
3. அத்வைதம்: சங்கராச்சாரியார்
   இரண்டு அற்ற ஒன்று என்பது இவர்களின் கருத்து.

'சைவ சித்தாந்தம்' சுத்த அத்வைதம் — என்று அழைக்கப்படுகிறது, எவ்வாறு எனில்;

"அனைத்தும் இறைவனே".
இறைவனிடமிருந்து அனைத்தும் தோன்றி, இருந்து, மீண்டும் இறைவனிடமே ஒடுங்கும் என்பதை சுருக்கமாக பார்க்கலாம்...

சிவனுடைய மனைவி சக்தி எனும் மாயா சக்தி.
சிவனும்- மாயையும் சேர்ந்து, இந்த பிரபஞ்சத்தையும் அனைத்து ஜீவராசிகளையும் படைத்தனர்.

சிவபெருமானே முத்தொழில்களையும் செய்வதற்கு மும்மூர்த்திகளையும் படைத்தார். ஆணவம் **-** கன்மம் **-** மாயை எனும் மும்மலங்களை, ஜீவ ராசிகளோடு சேர்த்தே படைத்து விட்டார். புருஷார்தங்களில் தர்ம -அர்த்த- காம இவைகளைத் தவிர்த்து "மோக்ஷம் "தான் ஜீவர்களுக்கு இறுதியான குறிக்கோளாகும்.

மும்மலங்களையும் நீக்கிய பிறகு அந்த ஜீவன் இறைவனோடு ஐக்கியம் ஆகின்றான். ஜீவன் இறைவனோடு இரண்டற கலப்பதில் நான்கு நிலைகள் உள்ளன:

1. சாலோக்கியம்
2. சாமீப்யம்
3. சாரூப்யம்

4. சாயுஜ்யம்.

இவற்றைப் பற்றி நாம் திருமந்திரத்தின் பாடல்களில் விளக்கமாக பார்க்கலாம்.

<u>சைவ சித்தாந்தத்தில் திருமந்திரத்தின் பங்கு:</u>

திருமந்திரம் பல மகா வாக்கியங்களை சைவ சித்தாந்தத்திற்கு கொடுத்துள்ளது.

1. அதில் மிக முக்கியமானது "அன்பே சிவம்".
2. ஒன்றே குலம்: ஒருவனே தேவன்.
3. உடம்புள்ளே உத்தமன் கோவில் கொண்டான் என்று உடம்பினை யாமிருந்து ஓம்புகின்றேனே.
4. மரத்தை மறைத்தது மாமத யானை...
5. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்....

இதுபோல இன்னும் பல மஹாவாக்கியங்களை திருமூலர் சைவ சித்தாந்தத்திற்காக அர்ப்பணித்துள்ளார்கள்.

திருமந்திரத்தின் ஒவ்வொரு தந்திரத்தின் சாரத்தையும் நாம் பார்க்க இருக்கின்றோம்.

## பாயிரம்:

எடுத்துக்கொண்ட காரியம் நிறைவு பெறுவதற்கும், அந்த காரியத்தினால் பலர் பிரயோஜனம் அடைவதற்காகவும் விநாயகர் காப்பு பாடப் பெற்றது.

பிறகு, ஒன்றானவன் எப்படி பலவானான் என்பதை கடவுள் வாழ்த்து விளக்குகிறது. சிவனை நந்தி என்றும், அவனே மாயாவி என்றும், பசு பதி பாசத்தை உருவாக்கி ஜீவர்களை அறியாமையில் ஆழ்த்தினான் என்றும், அறியாமையிலிருந்து வெளி வருவதற்கு- குருவின் முக்கியத்துவத்தையும், வேத ஆகமங்களை பற்றியும், அகஸ்தியரை காண செல்வது பற்றியும், ஞானம்- ஞேயம் ஞாத்ரு என்கின்ற திரிபுடியை பற்றியும், இறைவன் ஒருவனே பலவாக மாறியதை பற்றியும் இதில் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் பாயிரத்தின் இலக்கணப்படி.....

- நூலின் பெயர்
- ஆசிரியர் பெயர்
- நூலின் வழி
- இயற்றிய இடம்
- நூலின் மையப் பொருள்
- நூல் அரங்கேற்றத்தின் போது அதனைக் கேட்டோர்
- நூலின் பயன்

ஆகிய இவற்றை கூறுதல் இயல்பு.
திருமூலர் மேற்கூறிய அனைத்து விஷயங்களையும் சேர்த்து பாயிரத்தை இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாவது தந்திரம்:

திருமூலர் சைவ சித்தாந்தத்தின் தத்துவத்தை இந்த தந்திரத்தில் வெளிப்படுத்துகின்றார்.

பிரித்து அறிவதற்கு கடினமான இரண்டு விஷயங்களை இங்கே கூறுகின்றார்: ஆத்ம அனாத்ம விசாரம். பசு பதி பாசம் என்கின்ற மூன்று விஷயங்களை எடுத்து ஆராய்ச்சி செய்யப்படுகிறது.

சிவனுக்குள்ளும் சீவனுக்குள்ளும் இருக்கும் உள்ளுணர்வை பேசுகிறார். சத்-அசித் பற்றியும், ஐந்து புலன்களும் அதன் செயல்பாடுகளும் சித்தை மறைத்து அசித்தாக வெளிப்படுகிறது என்றும் கூறுகிறார். இதனால் ஜீவன் அடைய வேண்டிய முக்தி நிலையை அடைய முடியாமல் தடைபடுகின்றான் எனவும், ஜீவன் முக்தன் என்பவன் சித்த புருஷன் ஆகின்றான் என்றும் கூறப்படுகிறது.

சைவ சித்தாந்தத்தில் உள்ள 36 தத்துவங்களைப் பற்றியும், மற்ற பிரிவுகளில் உள்ள தத்துவங்களைப் பற்றியும் பேசப்படுகிறது.
பஞ்ச பூதங்களில் பிரதானமாக இருக்கின்ற மஹா காச தத்துவமே சிவபெருமான்தான் என்றும் நமக்குள் இருக்கின்ற கடாசமும் அவனே என்றும் கூறப்படுகிறது.

இறுதியாக, கர்ம விதியைப் பற்றியும் பேசுகிறது.

---

## இரண்டாம் தந்திரம்.

இதில் லிங்க புராணத்தில் சொல்லப்படுகின்ற புராணக் கதைகளின் மூலமாக தத்துவங்களை எடுத்துரைக்கின்றார்.

மேலும், சிவபெருமானின் ஐந்தொழில்களாகிய ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்பதையும் விளக்குகிறார்.

சிருஷ்டி, பராபரம், பராபரை, பரம், பறை, நாத, பிந்து, சக்தி, ஞான கிரியா, ஐந்து பூதங்களின் தோற்றத்திற்கான ஆதாரம் எனவும், படைப்பு என்னும் விளையாட்டிற்கு சிவபெருமானே மூல காரணம் எனவும் கூறப்படுகின்றது.

சுத்த அசுத்த பிரகிருதி, நாதம் ஆகியவை எவ்வாறு வந்தது என்பதையும் விளக்குகிறார்.

ஐந்தொழிலுக்காக ஐந்து கடவுள்களை படைத்து, மாயா சக்தியின் தோற்றம், மாயையின் 5 பெயர்கள், காரிய - காரண நியாயம், விதவிதமான படைப்பு, அங்கிங்கெனாத படி எங்கும் நீக்கமற நிறைந்து இருப்பது இறைவன் எனவும் கூறப்படுகின்றது.

இறைவன் பிறப்பில்லாதவன், தேகத்தின் படைப்பு, இயல்பு, 36 தத்துவங்கள், மூன்று வித குணங்கள், நான்கு அந்தக்கரணங்கள், ஆறுவித கீழான குணங்கள் (மலங்கள்) ஆகியவை அனைத்திற்கும் ஆதாரம் சிவனே எனவும், ஜீவ, ஜகத், ஈஸ்வரன் பற்றியும் கூறப்படுகிறது.

விஞ்ஞான கலர், பிரயாளகலர், சகலர், முக்தி, மானச பூஜை, சிவபெருமானின் பஞ்சமுகங்களின் தத்துவங்கள், சமுத்திர மதனம் ஆகியவை பற்றியும் இந்த இரண்டாம் தந்திரம் பேசுகிறது.

---

## மூன்றாம் தந்திரம்.

இதில் அஷ்டாங்க யோகம் பற்றியும், அஷ்டமா சித்தி பற்றியும், சமாதியை பற்றியும், குண்டலினியைப் பற்றியும், காய சித்தி - கேசரி யோகா, யோகத்தில் ஒழுக்க முறை இவைகளைப் பற்றியும் இந்த தந்திரம் பேசுகிறது.

காமம் மற்றும் உடலுறவு பற்றியும், அதிகாலை நேரத்தில் சிறுநீர் கழிப்பதில் உள்ள மருத்துவ குணத்தை பற்றியும், சந்திர யோகா எனும் அழியாத நிலையை அடைவது பற்றியும், பதஞ்சலி முனிவரைக் காட்டிலும், திருமூலர் அதிகப்படியாக யோக நிலையை பற்றியும் விளக்கி உள்ளார்.

---

## நான்காம் தந்திரம்.

இதில் முக்கியமாக மந்திரங்கள் மற்றும் தந்திரங்கள் பற்றி விரிவாக சொல்லப்படுகிறது.

'ஓம்' மற்றும் 'சிவாய நம' எனும் அஜபம் என்று சொல்லக்கூடிய அமைதியான மந்திரத்தை ஜெபம் செய்வது பற்றியும், சிவபெருமானின் திரு அம்பல சக்கரம் என்று சொல்லக்கூடிய எந்திரத்தை பற்றியும், அம்பல என்றால் அம்பரம் அதாவது ஆகாசம் (சித் அம்பரம்-சிதம்பரம்) என்று பொருள்.

ஓம் சிவாய நம எனும் ஆறெழுத்து மந்திரத்தையும் ஓம் நமசிவாய என்று பஞ்சாட்சரமாக சொல்லும் மந்திரத்தையும்,
51 எழுத்துக்களாக மாற்றி எந்திரம் செய்வது பற்றியும் இத்தந்திரம் பேசுகிறது.

சைவ சித்தாந்தம் என்பது சரியை, கிரியை, யோகம் மற்றும் ஞானம் ஆகும். இதில் கிரியா என்று சொல்லக்கூடிய வேத பூஜை விதிமுறைகளும் அதற்கு தேவையான பீஜ மந்திரமும் சொல்லப்படுகிறது. மேலும் கிரியா எனும் தலைப்பில் புற பூஜையை மட்டுமல்லாமல் அகத்தில் தாந்த்ரீக முறையும் விளக்கப்படுகிறது.

'திருப்புரை' என்று சொல்லக்கூடிய தந்திரத்தில் சக்தியின் பங்கை பற்றியும், சிவசக்தி இணைந்து செயல்படுவது பற்றியும்,
16 கலைகளுடன் கூடி, நாதம் மற்றும் நாதாந்தத்தில் இறைத்தன்மை இருப்பது பற்றியும் பேசப்படுகிறது.

பைரவி மந்திரம் மற்றும் சக்தியின் மந்திரம், தந்திரத்தில் பூரண சக்தியாக அதாவது பராசக்தியாக படைக்கும் பொழுது சிவனுடன் சேர்ந்து இருப்பது பற்றியும் பேசப்படுகிறது.

கிரியா சக்தி, போக சக்தி, பராசக்தி என்று தந்திராவில் அனைத்திற்கும் ஆதாரமாகவும், சிவ சக்தியின் சேர்க்கை, மாயா, நாதம், பிந்து, 36 தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டு இருப்பதைப் பற்றியும் இத்தந்திரம் பேசுகிறது.

தாந்திரீ க சக்கர விசயத்தில் நவக்காரி எனும் நவாக்ஷரி ஒன்பது அக்ஷரங்கள் கொண்ட பீஜ மந்திரத்தில்... பைரவி சக்கரம், சாம்பவி சக்கரா, புவனாபத்தி சக்கரா பற்றியும்,
பீஜ மந்திரமான ஸ்ரீம் கிளிம் ஹ்ரீம்... எழுத்தையும் பேசுகிறது.

---

## ஐந்தாம் தந்திரம்.

சைவ சித்தாந்த நிலையை அடைவதற்கு உண்டான வழியையும், உள்ளத் தூய்மை உள்ளவர்கள் அடையக்கூடிய சுத்த சைவம் பற்றியும், சுத்தமாயை-அசுத்தமாயை மற்றும் முடிவான பரம்பொருள் பற்றியும், அறியாமை நீங்கி, அறிவுக்கூர்மையோடு, உண்மை எது? பொய் எது? என்பதை பிரித்து அறியக்கூடிய புத்திசாலித்தனமும் உடையவர்கள் சைவ சித்தாந்த ஞானத்தை பெற்று முறையாக பயிற்சி செய்து, உருவத்தை கடந்த சப்தமற்ற சப்தத்தை அடைகிறார்கள். மனத்தூய்மை இல்லாதவர்கள் இதை அடைய முடியாது என்பதையும், சித்தாந்தமும்-வேதாந்தமும் ஒன்றே என்று அறிகிறார்கள் என்பதைப் பற்றியும் பேசுகிறது.

சைவ சித்தாந்தம் சரியை-கிரியை-யோகம்-ஞானம் என்ற நான்கு படிநிலைகளை விளக்குகிறது.

சைவ சித்தாந்தம் சிவனோடு ஐக்கியம் ஆவதை பற்றி பேசுகிறது. பிரம்மனோடு அல்ல.

ஞானம்-சன்மார்க்கம் இது இறைவனோடு ஐக்கியம் ஆவதை பற்றியும், யோகம்-சகா மார்க்கம் பற்றியும், கிரியா-சத்புத்ர மார்க்கம் பற்றியும், சரியை-தாச மார்க்கம் பற்றியும் பேசுகிறது.

சைவ சித்தாந்தம் ஜீவர்கள் அடையக்கூடிய நான்கு வித முக்தி நிலையை பற்றி பேசுகிறது.

சாலோக்கியம்-சிவலோகத்தையும், சாமீப்யம்-சிவன் அருகிலும், சாரூபம்-சிவன் ரூபமாகவும், சாயுஜ்யம்-சிவனோடு இரண்டற ஐக்கியமாவது பற்றியும் விரிவாக விளங்குகிறது.

---

## ஆறாம் தந்திரம்.

ஆன்மீகத்தில் மேல் நோக்கிய பயணத்தை மேற்கொள்கிறவர்களுக்கு குருவின் மகத்துவம் பேசப்படுகிறது.

இதில், அறிபவன் - அறிதல் - அறிவு என்கின்ற திரிபுடியை பற்றியும், துறவு மற்றும் தபசை கடைப்பிடிப்பதற்காக மேலான பலவித மார்க்கங்களை பற்றியும் இந்த சைவ சித்தாந்தம் விளக்குகிறது.

தவம் - சரியான பாதையில் மேற்கொள்ள வேண்டும் என்றும், தவறினால் பாதிப்பை தரும் என்பதை பற்றியும்,
நாம் பூசி கொள்கின்ற விபூதியை பற்றியும் விளக்குகிறது.

இந்தத் தந்திரம் இறுதியாக,
சரியான ஆன்மீக சாதகனின் ஒழுக்கம்,
பண்பாடு மற்றும் குணங்கள் பற்றி விளக்கமாக சொல்கிறது.

---

## ஏழாம் தந்திரம்:

யோகா மற்றும் கிரியா இவற்றை தெளிவாக விளக்குகிறது.

இந்து மதத்தின் அடையாளமாகிய தாமரை சின்னத்தில், ஆதார (சக்கர)ங்களை விளக்குகிறது. மேலும் அண்டம்-பிண்டம் ஆகியவற்றில் உள்ள லிங்க வடிவத்தை விளக்குவதோடு, சதாசிவம் - ஆத்மா - ஞானம் மற்றும் சிவன் என்ற விஷயங்களை ஆராய்கிறது.

சதாசிவம் மற்றும் சிவம் இரண்டிற்கும் உள்ள வித்தியாசங்களை விளக்குகிறது. சகஸ்ராரத்தில் வீற்றிருக்கின்ற சதாசிவன், ஐந்து சக்திகள் (இச்சா, கிரியா, ஞான, பரா, ஆதி சக்தி) உடன் கூடியவர் என்றும், இவர்களிடமிருந்து 4 வேதங்களும், 6 வேத அங்கங்களும் மற்றும் ஆகமங்களும் தோன்றின எனவும் கூறுகிறது.

குண்டலினியை எழுப்புவது பற்றியும் விளக்கமளிக்கிறது. சிவபெருமானே ஆதி குரு என்றும், சைவ சித்தாந்தம் என்பது சிவபெருமானின் அருள் கொடை என்றும், சிவ பூஜையின் முக்கியத்துவம் பற்றியும் கூறுகிறது.

முத்திரைகளை பயிற்சி செய்வது, குண்டலினி யோகாவை கடைப்பிடிப்பது மற்றும் சமாதியில் நிலை நிற்பது ஆகியவற்றைப் பற்றி இந்த தந்திரத்தில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது.

தந்திரம்: தந்திர முறைகளை சரியான குருவின் வழிகாட்டுதலின்படி கடைபிடிக்க வேண்டும், இல்லையெனில் அது மோசமான விளைவை தரும் என்று எச்சரிக்கிறது.

சூரியன் தான் அனைத்து சக்திகளின் மூலம் என்று திருமூலர் மிகத் தெளிவாக விளக்குகிறார்.

சிவனுக்கும்-சீவனுக்கும் இடையிலான உறவை பேசுகிறது. புருஷன் என்பவன் இறைவனே. சிவன் 36 தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டு இருந்து ஜீவனுக்கு ஞான ஒளியை தந்து அருளுகின்றார்.

ரிக் வேதத்தில், அதிதியின் பிள்ளைகள் ஆதித்யர்கள் என்று கூறப்படுகிறது.

சூரியன் "சிவாதித்யா" என்றும் அழைக்கப்படுகிறார். இவர் விஷ்ணுவின் அம்சம் என்றும் கூறப்படுகிறது.

தந்திரக் கலையில் சூரியனின் ஆதிக்கம் உள்ளது. தத்துவங்கள், சக்கரங்கள், கலைகள், மற்றும் ஆதாரங்கள் ஆகியவை மனித உடலுக்குள் இருப்பதை சுட்டிக்காட்டுகிறது.

சிவனுக்கும் சீவனுக்கும் இடையிலான உறவை விவரிக்கிறது. புருஷன் என்பவன் இறைவனே. அவனே சக்தி, ஞானம், க்ரியை, தத்துவம், மாயை, வைகரி என்று பரிணமித்திருக்கின்றார்.

இறைவன் அணுவுக்குள்ளும் அணுவாகி நடனத்தின் மூலமாக மனிதனுக்குள் இருக்கும் பாசத்தை அழித்து, இறுதியில் தன்னோடு ஐக்கியமாக்கி கொள்கிறார்.

ஜீவனை பசு என்றும் ஆத்மா என்றும் வர்ணிக்கிறது. சிவன் 36 தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டு, ஜீவனுக்கு ஞான ஒளியை தந்து அருளுகின்றார்.

இறைவனின் மிகப்பெரிய அணுக்கிரகம் உள்ளத்தில் ஏற்படுகின்ற **"பேரமைதி"**. அந்த அமைதியின் மூலமாக சீவனுக்குள் இருக்கும் மலத்தை அழித்து தன் கருணையினால் அவனை ஆட்கொள்கிறார்.

---

## எட்டாம் தந்திரம்:

தந்த்ரா பற்றிய அறிவை பல நிலைகளில் இந்த தந்திரம் வெளிப்படுத்துகிறது.

முதலில், மனித உடலின் இயல்பு பற்றியும், உடலில் ஏற்படுகின்ற விதவிதமான அனுபவங்கள் பற்றியும், ஸ்தூல - சூட்சும உடல் பற்றியும், சூட்சும உடலில் இருக்கின்ற 8 விஷயங்கள், ஸ்தூல உடலில் இருக்கின்ற 5 இந்திரியங்கள், 24 தத்துவங்கள், ஐந்து வித அவஸ்தைகள் (விழிப்பு, கனவு, தூக்கம், துரியம், துரியாதீதம்), 6 ஆதாரங்கள், 18 கலைகள் ஆகியவற்றைப் பற்றியும் பேசுகிறது. ஸ்தூல - சூட்சும - காரண சரீரங்கள், ஆத்மாவில் ஐக்கியமாவதை பற்றியும், இந்த ஜீவன் மீண்டும் மீண்டும் பிறப்பு எடுப்பதை பற்றியும் விவரிக்கிறது.

ஞானியின் உடல், யோகியின் உடல், முனிவரின் உடல் பற்றியும், மாயையின் பிரளயாகலர், சகலர் பற்றியும், 10 இந்திரியங்கள், தன் மாத்திரைகள், பத்து வாயுக்கள், நான்கு அந்தக்கரணங்கள், புருஷன், ஜீவானுபவம், பஞ்சபூதங்களால் ஆன உடல், தங்க நிற பூமி, வெள்ளை நிற நீர், சிகப்பு நிற தீ, கருப்பு நிற காற்று, புகை சூழ்ந்த ஆகாசம் மற்றும் 96 தத்துவங்கள், 16 கலைகள்,

தூக்கத்தில் நடைபெறும் விஷயங்கள், துரியம் பற்றிய, துரியாதீதம் பற்றிய விஷயங்களையும், கேவல நிலையில் விழிப்புணர்வு பற்றியும், பிரம்மா - விஷ்ணு - ருத்ரன் - மகேசன் மற்றும் சதாசிவன் பற்றியும் இந்த மந்திரம் தெளிவாகப் பேசுகிறது.

துரியாதீதம் **-** ஆத்மா அனுபவம் மட்டுமே,
துரியம் **-** வார்த்தைகளில் ஆத்மா அனுபவம்,
சுஷூப்தி **-** மாயை ஜீவனை கட்டுப்படுத்தி வைத்திருப்பது.
விழிப்பு நிலை **-** பல்வேறு விதமான நிகழ்வுகளில் வாழ்ந்து கொண்டிருப்பது - இவைகளைப் பற்றியும் தெளிவாக இந்த தந்திரம் பேசுகிறது.

கேவல நிலை, சகல நிலை**,** சுத்த நிலை ஆகியவற்றையும் தெளிவாக பேசுகிறது. “உயர்வான அனுபவமாகிய "பரா அவஸ்தை"யை யும் இது பேசுகிறது.

சிவனும் சக்தியும் சேர்ந்த பராபர நிலை, சித் - இச்சா, ஞானம் - கிரியா ஆகிய தத்துவங்களைக் கடந்த ஆனந்த நிலை என்றும், துரியத்துக்கு அப்பால் உள்ள நிலை துரியா-துரியா அல்லது பரா துரியா என்றும்,
நான்காம் நிலையான துரியாவை கடந்த நிலை துரியாதீதம் என்றும்,
துரியாதீதத்தை கடந்த நிலை **"**சிவ துரியா**"** என்றும், இந்த தந்திரம் விளக்கமாக எடுத்துரைக்கிறது.

ஜீவ துரிய அவஸ்தையின் 10 அவஸ்தைகளை கடந்து பதினோராவது அவஸ்தையை ‘சிவ துரியா’ என்றும், அதை **‘பரா நந்தி’**யின் உணர்வு நிலையாகவும் விளக்குகிறது.
'பர சிவ' நிலையை கடந்த நிலை **"**பரமம்**"** என்றும்,
அதை கடந்து **"**பரம்பரம் அல்லது பர மகா சிவம்**"** என்றும் அழைக்கப்படுகிறது.

பர சிவ நிலையில் ஒன்பது விதமான வெளிப்பாடுகள் இருப்பதாக கூறப்படுகிறது.

தன்னை அறிதல் அல்லது உண்மை ஞானத்தை விளக்குகையில் எண்ணங்களின் படிநிலைகள் எடுத்துரைக்கப்படுகிறது.

விடுதலைக்காக ஜீவ **-** ஈஸ்வர **-** சக்தி நிலைகள் விவரிக்கப்படுகிறது.
சுத்த அவஸ்தையில் இருப்பவர் தெய்வீக குரு நாதர் என்றழைக்கப்படுகிறார்.

இவர் ஜீவனின் யாத்திரையைப் பற்றி பேசுகிறார்.

ஐந்தாம் நிலையான ஜீவ துரியாதீத நிலையை மேற்கொண்டு
**7-**ம் நிலை**, 9-**ம் நிலை**, 11-**ஆம் நிலை வரையிலும் பேசி, **11**ஆம் நிலையை அடைபவர்கள் **"**தெய்வீக உடலை**"** அடைகிறார்கள் என்று திருமூலர் கூறுகிறார் இந்த தந்திரத்தில்.

தூய அவஸ்தை நிலையில் மலங்கள் எதுவும் இல்லாமல்,
இதயத்தில் இறைவன் சிவபெருமான் குடி கொள்வதையும்,
சமாதி நிலையில் அனுபவிக்கும் பொழுது வரும் வாக்கியமே 'மகா வாக்கியம்' என்பதையும் விவரிக்கிறார். திருமூலர் ஆறு (வேதாந்தம், சித்தாந்தம்,

நாதந்தம், போதாந்தம், யோகாந்தம் மற்றும் கலாந்தம்) அந்தங்களை பற்றி திரும்பத் திரும்ப பேசுகிறார். வேதாந்தத்திற்கும் - சித்தாந்தத்திற்கும் அடிப்படையில் உள்ள வித்யாசங்களை மிகவும் விவரமாக கூறுகிறார்.

ஞானம் (தலை) முதல் பக்தி (பாதம்) வரை உள்ள நான்கு விதமான தபசுகளை பற்றி கூறுகிறார்.

மூன்றின் மேன்மையை விளக்குவது போல சில விஷயங்கள் அமைந்துள்ளன:
ஆசை - கோபம் - அறியாமை ஆகியவற்றில் இருந்து விடுபடுகின்ற வழியையும் கூறி, தத் - துவம் - அசி என்கின்ற மகாபாக்கியத்தின் மூன்று சொற்களையும், ஜாக்ரத் - சொப்ன - சுஷுப்தி என்கின்ற மூன்று அவஸ்தைகளில் இருந்து விடுதலை அடைவது பற்றியும்,
மூன்று விதமான ஜீவன் முக்தர்களைப் பற்றியும் கூறி,
அதீத ஜீவன் முக்தி (விழிப்புணர்வை கடந்த நிலை),
உபசாந்த பரா முக்தி (தெய்வீக அமைதி),
ஆனந்த சிவமுக்தி (தெய்வீக ஆனந்தம்)
என இந்த மூன்றுமே சொரூப முக்தியின் அடையாளங்கள் ஆகும் என்பதையும் கூறி இறுதியாக,பக்தியில் சரணாகதியின் மூலமாகவும், ஞானத்தில் அறிவை பெற்று, அதை அறிந்து, அதன்படி வாழ்ந்து காட்டுவதன் மூலமாகவும் - முக்தி நிலையை அடைவது பற்றி கூறி முடிக்கிறார் திருமூலர் இந்த தந்திரத்தில்.

---

## ஒன்பதாம் தந்திரம்

இந்தத் தந்திரத்தில் வாழ்வின் இறுதியான லட்சியம் - மோட்சம் பற்றி பெரிதும் கூறுகிறார்.

குரு, ஆசிரமம், ஞானகுரு, பிரணவ சமாதி, தெய்வீக ஒளி, தூல, சூட்சும, அதிசூட்சும, சப்தத்தின் தோற்றம், பஞ்சாட்சரம், நடன நிலை தரிசனம் ஆகியவற்றை பற்றி விளக்கி, பல வழிகளில் மோட்சத்தை அடையலாம் என்று கூறுகின்றார்.

மனிதனின் இதய ஆகாசத்திலும், புற ஆகாசத்திலும் நடராஜரின் பலவிதமான நடனங்களை கண்டு தரிசிக்கலாம் எனவும், நடன தரிசனம் பக்தனுக்கு ஞானோதயத்தை தருகிறது எனவும், மேலும் சில தர்ஷனங்களை பற்றியும் இந்த தந்திரம் விளக்குகிறது.

இந்த தரிசனங்கள் எல்லாம் கர்மங்களில் இருந்து விடுபட்டு, மோக்ஷத்தை அடைவதற்கு உண்டான பரிசுகள் என்றும், நிர்வாண நிலை என்பது அனைத்தையும் கடந்த நிலை. அது சைவ சித்தாந்தத்திலும், வேதாந்தத்திலும் மோக்ஷ நிலையை குறிப்பிட உதவுகின்ற ஒரு சொல்லாகும்.

சித்த மருத்துவத்தை பற்றியும், மோக்ஷ நிலையைப் பற்றியும் சிலாகித்து பேசுகிறார் இந்த ஒன்பதாம் தந்திரத்தில் திருமூலர்.

# விநாயகர் காப்பு

---

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## பதப்பொருள்:

ஐந்து கரத்தனை — நான்கு கைகள்+ ஒரு தும்பிக்கை ஆக ஐந்து கரங்களை உடைய விநாயகனை
யானை முகத்தனை — யானை முகம் கொண்டவனை
இந்தின் — சந்திரனின்
இளம்பிறை — மூன்றாம் பிறை
போலும் — போல் இருக்கும்
எயிற்றனை — தந்தங்கள் உடையவனை
நந்தி — சிவபெருமான்
மகன்றனை — மகனான விநாயகனை
ஞானக்கொழுந்தினை — ஞான சுடர், ஞான ஒளியாய் இருப்பவனை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே— எனது அறிவில் விநாயகனை வைத்து, நிறுத்தி, அவனது திருவடிகளை வணங்குகிறேன்.

## சாரம்:

ஐந்து கரங்களும், யானையின் முகமும், பிறைசந்திரனை போன்ற வடிவில் தந்தங்களும் கொண்டவிநாயக பெருமானை, சிவபெருமானது மகனை, ஞானச்சுடராய் விளங்குபவனை நான் எனது அறிவில் வைத்து, அவனது பாதங்களை வணங்குகிறேன்.

## விளக்கம்:

இப்பாடலில் திருமூலர் விநாயகரது தனிச்சிறப்புகளை கூறி அவரை வணங்கி, பின் தனது நூலான திருமந்திர மாலையை சொல்லத் தொடங்குகிறார்.
முதலில் விநாயகரது தனிசிறப்பு - அவருக்கு ஐந்து கரங்கள் உள்ளன என்கிறார். இவ்வைந்துகரங்களை கொண்டு ஐந்தொழில்களை செய்கிறார் (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்). அருணகிரிநாதர் தனது கந்தர் அநுபூதி விநாயகர் காப்பில் “ நெஞ்ச கனகல்லு நெகிழ்ந்துருக .... என தொடங்கி ... பஞ்சகர ஆனை பதம் பணிவாம் “ என்று அவரும் விநாயகருக்கு **5** கரங்கள் உள்ளன என்கிறார்.
அவ்வையாரும் தனது விநாயகர் அகவலில் “ அஞ்சு கரமும் அங்குச பாசமும்” என்று விநாயகரை போற்றுகிறார்.
அடுத்து மூலர் யானை முகம் உடையவனே என்று விநாயகரை போற்றுகிறார். இதையே அவ்வையாரும் தனது அகவலில் “ வேழ முகமும்” என்று கூறுகிறார். யானையின் தனிசிறப்பு - எப்போது பார்த்தாலும் சலிப்பு தட்டாது. யானை ஞானத்தை காட்டுகிறது. யானைக்கு சரீர பலம், புத்திபலம், உண்டு. யானை மனித குலத்துக்கு பயன்படுவது. இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் என்று

பெயர் பெற்றது.(இவற்றை கூறியவர் காஞ்சிமகான் மகா பெரியவா).
அடுத்து பிறைசந்திரனை போன்ற வடிவில் தந்தங்களை கொண்டவர் விநாயகர் என்கிறார் மூலர். இதை எழுத்தாணியாக பயன்படுத்தி வியாசர் சொல்ல மகாபாரத்தை எழுதினார் என்று புராணம் கூறுகிறது. இதையே ஆயுதமாகவும் பயன்படுத்தி கஜமுகாசுரனை அழித்தார் என்றும் புராணங்கள் கூறுகின்றன.
ஐந்தொழில்களும், பிறைசந்திரனும் சிவனை குறிப்பன. ஆக விநாயகர் ஈசனின் அம்சம்
தான் என்று கூறுகிறாரா திருமூலர்?
இதை உறுதிபடுத்த அடுத்தது விநாயகர் சிவபெருமானின் மகன் என்று போற்றுகிறார். இங்கு நந்தி என குறிப்பிடுவது சிவனைதான். வேறு சில இடங்களில் நந்தி என்பது கயிலையின் தலைமை காவல் நந்தி தேவரை குறிக்கும். இடத்துக்கு ஏற்ப பொருள் கொள்ளவேண்டும்.
பின்பு விநாயகர் ஞானசுடர் என போற்றி, இத்தகைய சிறப்புகளை கொண்ட விநாயகரை நான்எனது அறிவில் வைத்து அவனது பாதங்களை வணங்குகிறேன் என்கிறார் மூலர்.

## சுருக்கம்:

சிவனது அம்சமான விநாயகரை எனது புத்தியில் வைத்து வணங்குகிறேன் என்கிறார் மூலர்.

## சிந்தனைக்கு:

ஏன் கடவுள் வாழ்த்து அல்லது காப்பு பாடுகிறார்கள் நம் அருளாளர்கள்?

நூல் ஆசிரியர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட சுபகாரியம் நல்லபடியாக முடியவும், தாங்கள் எழுதும் நூல் ஆன்மீக சாதகர்களுக்கு பயன்படும்வகையில் இருக்கவும் இறைவனை வேண்டி கடவுள் வாழ்த்தும்/காப்பும் பாடுகின்றனர்.
அதுபோலவே, ஆன்மீக மாணவர்களும் இப்பாடல்கள் முழுவதையும் கற்கவும், அவை வாழ்வில் நடைமுறை படுத்தவும் இறைவனை வேண்டி கடவுள் வாழ்த்தும்/காப்பும் பாடுகிறார்கள்.

# பாயிரம்

## கடவுள் வாழ்த்து

### மந்திரம் 1

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தான்உணர்ந் தெட்டே.

### பிரித்து எழுதுதல்:

**ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான் ஐந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்**
**சென்றனன் தானிருந்தான் உணர்ந்து எட்டே.**

### பதப்பொருள்:

**ஒன்றவன் தானே – இறைவன் ஒருவனே(அவனே சிவபெருமான்)**
**இரண்டவன் இன்னருள் – இனிய அருள் இருவகைப்படும். ஒன்று அறக்கருணை, இரண்டு மறக்கருணை.**
**நின்றனன் மூன்றினுள் – அவன் மூன்று நிலைகளில் நின்று அருள் புரிகிறான். அருவம், உருவம், அருவுருவம்.**
**நான்கு உணர்ந்தனன் – உயிர்கள் தன்னை வந்தடைய சரியை, கிரியை, யோகம், ஞானம் எனநான்கு நெறிகளை உலகிற்கு உணர்த்துபவன். மேலும் தன்னை வந்தடைய அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு நிலைகளை வகுத்தவன்.**
**ஐந்து வென்றனன் – மெய், வாய்,கண்,மூக்கு, செவி எனும் ஐம்புலன்களை வென்றவன். நாமும் உய்ய அவற்றைக் கட்டுப்படுத்த அருள் புரிபவன்.**
**ஆறு விரிந்தனன் – நமது உடம்பில் ஆறு சக்கரங்கள்(energy spots). அவை முறையே மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம்(நாபி), அநாதகம்(இதயம்), விசுத்தி(தொண்டை கழுத்து), ஆக்ஞா(புருவமத்தி). இந்த ஆதாரங்களில் விரிந்து இருப்பவன், மற்றும் இவற்றுக்கு உரிய தேவதைகளாகவும் இருப்பவன்.**
**ஏழு உம்பர்ச் சென்றனன் – உம்பர் எனில் மேலுலகம். பிரமலோகம், விஷ்ணுலோகம், உருத்திரலோகம், மகேச்வரலோகம்,சதாசிவலோகம்,சக்திலோகம், சிவலோகம், என ஏழுஉலகங்களுக்கும் மேலே கடந்து இருப்பவன்.**
**தான் இருந்தான் – இத்தகைய எங்கும் பரந்திருக்கிற சிவன் நம்முள்ளே இருக்கிறான்.**
**உணர்ந்து எட்டே – அவனை உணர்ந்து முத்தியை எட்ட முயல்வாயாக.**

### சாரம்:

**ஒரே இறைவனான சிவபெருமான், மூன்று நிலைகளில் நின்று, இரு விதமாக உயிர்களுக்கு அருள் புரிகிறான்.**

தன்னை வந்தடைய நான்கு நெறிகளை உபதேசிக்கிறான். ஐம்புலன்களை வென்று, அதனால் விளையும் மறுபிறவியை தவிர்க்க அருள் புரிபவன், நமது உடம்பின் ஆறு ஆதாரங்களிலும் விரிந்து இருப்பவன், மற்றும் ஏழு உலகங்களையும் கடந்து நிற்பவன். இத்தகைய ஈசன் நமது உள்ளே தானாக வந்து குடி இருக்கிறான். அவனை உணர்ந்து முத்தியை எட்ட முயல்வாயாக!

## விளக்கம்:

திருமூலர் தனது திருமந்திர மாலையின் முதல் பாட்டிலேயே, தனது நூலினுள் இருக்கும் அனைத்து பாடல்களின் சாரத்தை கூறுகிறார்.
பாடலை ஆராய்வோம். ஒன்றவன் தானே! என்கிறார் மூலர். அதாவது இறைவன் ஒருவனே, அவன் சிவபெருமான் என்கிறார். உலகத்திலுள்ள அனைத்து உயிர்களும், தேவர்களும், தெய்வங்களும் அவனுள் அடங்கும். அவன் ஒருவனே அனைவருக்கும் தலைவன். அவனுக்கு ஒப்பான கடவுள் எங்கு தேடினும் இல்லை என்றும், அவனைக் காட்டிலும் மேலான தேவர் ஒருவரும் இல்லை என்றும் பின் ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

அடுத்து இரண்டவன் இன்னருள் என்கிறார். இன்னருள் என்றால் இனிமையான அருள்,தித்திக்கும் திகட்டாத அருள். இறைவனது இந்த இனிமையான அருள் அறக்கருணை,மறக்கருணை என இரு வகைப்படும். அறச்செயல்களினால் இறைவனை அடைவது அறக்கருணை. உதாரணம் திருநாவுக்கரசர், மணிவாசகர், நாயன்மார்கள்,அவ்வையார், பட்டினத்தார், வள்ளலார் போன்றவர்கள்.
தான் பெற்ற ஆற்றலை தீய வழிகளில் சென்று ஆணவ செருக்கு மிகும் பொழுது இறைவன் அத்தகைய தன்மையை அழித்து அருள் புரிகிறான் , இது மறக்கருணை. உதாரணம் சூரபத்மன் போன்ற அசுரர்கள்.
இறைவனது இன்னருள் பற்றி மணிவாசகர் திருஅம்மானை எனும் பதிகத்தில் பாடுகிறார்:
" கிளி வந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியானை .... என்று துவங்கி ,,,,,,
எளி வந்து இருந்து இரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்து, என் உள்ளத்தின் உள்ளே ஒளி திகழ,,,," என்று சிவனது இன்னருளை பற்றி விளக்குகிறார்.
இரண்டு அவன் இன்னருள் எனபதற்கு இன்னொறு விளக்கமும் உண்டு. அருள் என்றால் சக்தி என்றும் பொருள் உண்டு. சிவனும் சக்தியுமாக இருவரும் ஒன்றாக அருள் புரிகின்றனர். உமைக்கு தன்னுடலில் பாதிதந்த அர்த்தநாரி திருமேனியன் சிவன், பெண்சுமந்த பாகத்தன், பெண் ஆளும் பாகன் என்பார் மணிவாசகர். சிவன் அம்மையப்பராய் சம்பந்தருக்கு அருளினார். ஆலயங்களில் சிவசக்தி சமேதராய் சன்னதி கொண்டுள்ளனர். வேறுபடாது- பிரிவிலாது இணைந்து அருள் புரிதலால் "இரண்டு அவன் இன்னருள்" என்று பொருள் கொள்ளலாம்.

அடுத்து மூன்றினுள் நின்றனன் ; சிவன் அருவம் , உருவம், அருவுருவம் என மூன்று நிலைகளில் நின்று உயிர்களுக்கு அருள் புரிகிறான் என்கிறார் மூலர் . பின்பு ஒரு பாடலில் அவரவர்களுக்கு அவரவர் விரும்பிய வடிவில் தோன்றி அருள் புரிகிறான் சிவன் என்கிறார்.
" ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றும் இல்லாற்கு, ஆயிரம்
திருநாமம் பாடி, நாம் தெள்ளேணம் கொட்டாமோ!" – சொல்வது மணிவாசகர்.
" உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!" – பாடுவது அருணகிரிநாதர், கந்தர் அநுபூதியில்.

அடுத்து நான்கு உணர்ந்தான் என்கிறார் மூலர். அதாவது உயிர்கள் அனைத்தும் தன்னை வந்து அடைய நான்கு நெறிகளை ஆகமங்களாக செப்புகிறார் சிவபெருமான். சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு.
நமது சரீரத்தை(உடலை) கொண்டு இறைபணி செய்து அவனை அடைதல் - சரியை. உதாரணம் உழவாரபணி செய்த திருநாவுக்கரசர்.

இறைவனை பாடியும், அருச்சனை, பூசைகள், அபிஷேகம், அலங்காரம், வேள்வி, போன்றவற்றை செய்து வழிபடுதல் – கிரியை - உதாரணம் திருஞானசம்பந்தர்.
ஆசனங்கள், தவம் போன்றவற்றால் உடலையும் உள்ளத்தையும் தூய்மை படுத்தி இறை சிந்தனையிலேயே இருந்து அவனை அடைவது - யோகம் - உதாரணம் - சுந்தரமூர்த்தி நாயனார்.
" நான் யார், எது பொய், எது மெய், எது காலத்திற்கு அப்பாற்பட்டது, நமது படைப்பின் நோக்கம் என்ன போன்ற கேள்விகளை தானாக எழுப்பி அவற்றை ஆராய்ந்து தெளிவது". – ஞானம் - உதாரணம் மாணிக்கவாசகர்.

அடுத்து ஐந்து வென்றனன் என்கிறார் மூலர். நம் வினைகளுக்கு மூல காரணம் ஐம்புலன்களால் விளையும் ஆசைகளே. வினைப்பயனாக மீண்டும் பிறவிகள் எடுக்கிறோம். விறுப்பு வெறுப்பு, வேண்டுதல், வேண்டாமை போன்றவை இல்லாதவன், ஆக ஐம்புலன்களையும் அடக்கி வென்றவன் சிவன். அவன் நமக்கும் பக்குவம் அடையும் நெறிகளை காட்டி புலன்களை கட்டுப்படுத்த அருள் புரிபவன்.
" ......ஐம்பலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிது எனக்கு அருளி....." வினாயகர் அகவலில் அவ்வையார்.
"..... மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால் விமலா!...." சிவபுராணத்தில் மணிவாசகர்.
" கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்று
உய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய் வாய் விழி நாசியொடும் செவி ஆம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே!" - கந்தர் அநுபூதியில் அருணகிரிநாதர்.

அடுத்து ஆறு விரிந்தனன் என்கிறார் மூலர். இது யோக நிலை சம்பந்தப்பட்டது. இறைவன் நமது உடலில் ஆறு ஆதாரங்களில்(சக்கரங்கள் )விரிந்து இருக்கிறான். யோக பயிற்சியின் மூலம் இவ்வாதாரங்களை சரிவர இயக்க, "மௌன நிலை"யை அடையலாம், அதற்கு அருள் புரிவாய் என அவ்வையார் வினாயகர் அகவலில் வேண்டுகிறார்
"...... ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே...." என்கிறார் அவ்வையார்.
யோக நிலைகளைப்பற்றி எமக்கு போதிய கல்வி அறிவு இல்லாததால், இது பற்றி மேலும் சிந்திக்க வாசகர்களது விருப்பத்துக்கு விட்டு விடுகிறேன்.

அடுத்து ஏழு உம்பர்ச்சென்றனன் என்கிறார் மூலர். சிவபெருமானது பரிமாணங்களை பற்றி விவரிக்கிறார். அவன் ஏழு உலகங்களைத்தாண்டி, அண்டங்களுக்கும் அப்பால் சென்று, விரிந்து கொண்டே இருக்கிறான்.
இதுபற்றி மணிவாசகர் திருஅண்டப்பகுதியில்
" .... அளப்பரும் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன;
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்;
சிறிய ஆகப் பெரியோன், தெரியின்....." என்று சிவபெருமானது விரிந்து கொண்டே செல்லும் பரிமாணத்தை அழகாக வர்ணிக்கிறார்.
மேற்கூறிய சிவனது அனைத்து தன்மைகளையும் அழகாக சுருக்கி
" ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க" என்று மணிவாசகர் சிவபுராணத்தில் பாடுகிறார்.

**அடுத்து, தான் இருந்தான் உணர்ந்து எட்டே என்கிறார் மூலர். இரு என்றால் தங்குதல், ஆயத்தமாக இருப்பது**
**என்றும் பொருள். அதாவது இத்தகைய அளவில்லா ஈசன், தானே வந்து நம் உள்ளே தங்கி எப்பொழுதும் அருள் புரிய தயார் நிலையில் இருக்கிறான். நாம் அவனை உணர்ந்து முத்தியை எட்ட முயல்வோமாக!**

**சுருக்கம்:**

**சிவபெருமான் ஒருவனே இறைவன், அவனை உணர்ந்து அவனை அடைய முயல்வோம்.**

சிந்தனைக்கு:

***இந்நூலின் பிரயோஜனம் என்ன?***

**முடிவான இலக்கை( இறைவனோடு இரண்டற கலப்பது) முதல் மந்திரத்திலேயே மூலர் கூறி விடுகிறார்.**

## மந்திரம் 2

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கும் நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனாங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே.

### பிரித்து எழுதுதல்:

போற்றி இசைத்து இன்னுயிர் மன்னும் புனிதனை
நால் திசைக்கும் நல்ல மாதுக்கும் நாதனை
மேல் திசைக்குள் தென் திசைக்கு ஒரு வேந்தனாம்
கூற்று உதைத்தானை யான் கூறுகின்றேனே.

### பதப்பொருள்:

இன்னுயிர் — இனிமையான எனது உயிர்
மன்னும் — நிலைபெற்ற
புனிதனை — தூய்மையான, சிவபெருமானை
நால் திசைக்கும் — கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்கு திசைகளுக்கும்
நல்ல மாதுக்கும் — உத்தமி என போற்றப்படும் உமாதேவிக்கும்
நாதனை — தலைவனை
மேல் திசைக்குள் — மேற்கூறிய நான்கு திசைகளுக்குள்
தென் திசைக்கு — தெற்கு திசைக்கு
ஒரு வேந்தனாம் — தலைவனாகிய
கூற்று — எம தர்ம ராஜாவை
உதைத்தானை — காலால் உதைத்தவனை
போற்றி இசைத்து — தோத்திரம் சொல்லி போற்றி இசைத்து
யான் கூறுகின்றேனே — நான் வழிபடுகின்றேன்.

### சாரம்:

எனது இனிமையான உயிரினுள் நிலைபெற்று இருக்கும் சிவபெருமானை,
கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்கு திசைகளுக்கும் தலைவனான
சிவபெருமானை,
உத்தமி என போற்றப்படும் உமாதேவிக்கும் தலைவனான சிவபெருமானை,
மேற்கூறிய நான்கு திசைகளுக்குள் தெற்கு திசைக்கு தலைவனாகிய
எம தர்ம ராஜாவை மார்கண்டேயனுக்காக காலால் உதைத்து அருள் புரிந்தவனை,
தோத்திரம் சொல்லி,போற்றி இசைத்து நான் வழிபடுகின்றேன்.

### விளக்கம்:

மூலர் தனது முதல் பாட்டில் சிவனது சிறப்புக்களை ஒன்று, இரண்டு, மூன்று என
வரிசைப் படுத்தி பாடியுள்ளார்.
இந்த 2வது பாடலில் ஒரு சில சிறப்புக்களை மேலும் விவரித்து போற்றி
வணங்குகிறார்.
அவற்றை சற்று சிந்திப்போம்.
சிவன் தானாகவே நம்முள்ளே குடியிருப்பதை இன்னுயிர் மன்னும் புனிதனை

என்கிறார்.

அதாவது எனது இனிமையான உயிருக்குள் நிலைபெற்று இருக்கும் சிவபெருமானை என்கிறார்.
“ ….. நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே….” சொல்வது மணிவாசகர் சிவபுராணத்தில்.
மன்னும் என்றால் நிலைபெற்ற என பொருள். “ மன்னும் மாமலை மகேந்திரம் அதனில்….” என்றுமணிவாசகர் கீர்த்தி
திருஅகவலில் குறிப்பிடுகிறார்.
மேலும் இங்கு சிவனை புனிதன் என்கிறார் மூலர்.
சிவபெருமானுக்கு புனிதன் என்றும் பெயர் உண்டு( தமிழ் அகராதி).
இதை பிற அருளாளர்களும் கையாளுகின்றனர்.
“… புற்றில் வாள் அரவும் ஆமையும் பூண்ட
புனிதனார் பனிமலர்க்கொன்றை….” என சீர்காழியில் ஞானசம்பந்தர் பாடுகிறார்.

முதல் பாடலில் ஏழு உலகங்களையும் கடந்து விரிந்திருக்கிறான் சிவபெருமான் என்கிறார் மூலர்.
இப்பாடலில் அவன் நான்கு திசைகளுக்கும்,அதாவது அண்டம் முழுவதுக்கும் அவனே தலைவன் எனமேலும் விவரிக்கிறார்.
இத்தன்மையை மணிவாசகர் தனது திருவாசகம் திருஅண்டப்பகுதியில் வெகு அழகாக வர்ணிக்கிறார்.
“ … நால்திசை நடப்பன நடாஅய்க்
கிடப்பன கிடாஅய்;
நிற்பன நிறீஇ…”
என்று நான்கு திசையிலும் நடப்பவற்றை நடத்தியும், கிடப்பவற்றை கிடத்தியும், நிற்பவற்றை நிறுத்தியும்
அண்டம் முழுவதையும் இயக்குகிறார் சிவமெருமான் என்கிறார் மணிவாசகர்.

மேலும் திருமூலர் இப்படலில் உமாதேவியை நல்ல மாது என குறிப்பிடுகிறார்.
இதை ஒப்ப “ …. மத்தள வயிறனை உத்தமி புதல்வனை….” என்று வினாயகரை திருப்புகழில் போற்றுகையில் உமாதேவியை உத்தமி என்கிறார் அருணகிரிநாதர்.

சிவபெருமான் நான்கு திசைகளுக்கும் ஒரோர் அதிபதியை நியமிக்கிறார், முறையே, இந்திரன் — கிழக்கு;
வருணன் — மேற்கு: குபேரன் — வடக்கு ; மற்றும் எமன் — தெற்கு.
சிவபெருமான் எட்டு வீரச்செயல்களை புரிந்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.
அதில் ஒன்று தென் திசைக்கு அதிபதி எமனை காலால் உதைத்த கதை.
மார்கண்டேயன் என்ற சிறுவன் சிவ பக்தன். தனது 16 வயது முடிந்ததும்
காலமாவேன் என்கின்ற எண்ணத்தில் சதா சிவனையே நினைத்திருக்க, 16 வயது முடிய குறித்த நேரத்தில் எம தர்ம ராஜா வர, மார்கண்டேயன் சிவலிங்கத்தை அனைத்துக்கொள்ள, எமன் வீசிய பாசக்கயிறு லிங்கத்தையும் சுற்றிவளைக்க, கோபமடைந்த சிவபெருமான் தனது காலால் எமனை உதைத்தார்.
மார்கண்டேயனுக்கு“என்றும் 16” என்ற வரத்தை வழங்கினார். எமனுக்கும் அருள் புரிந்தார்.
இக்கதையை மூலர் இங்கு குறிப்பிடுவதற்கு காரணம் — சிவபெருமான் அனைத்தையும் விழுங்கும் காலத்திற்கும் அப்பாற்பட்டவன் என்ற தனிச்சிறப்பை நமக்கு உணர்த்துவதற்காக.
மேலும் காலனை உதைத்ததாலும் அவனுக்கும் அருள் புரிந்தார் . இது அவரது மறக்கருணைக்கு எடுத்துக்காட்டு. இவ்வகையில் எமனும் கோடி புண்ணியம் செய்தவன். குட்டு பட்டாலும் மோதிரகைகளால் அன்றோ குட்டு பட்டான்!!!

ஆக இத்தகைய சிறப்பு தன்மைகளை உடைய சிவபெருமானை நான் தோத்திரம் சொல்லியும், போற்றியும் வழிபடுகிறேன் என்கிறார் மூலர்.

சுருக்கம்:

நம்முள் இருக்கும் சிவபெருமானை, நால் திசைக்கும், உமாதேவிக்கும் தலைவனை, காலனைவென்றவனை, நான்(மூலர்) போற்றி வழிபடுகிறேன்.

## சிந்தனைக்கு:

### காலத்தை வென்றவன் சிவன், எப்படி*?*

இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்ற மூன்று காலங்களும் மனதைச் சார்ந்தது. மனதை கடந்த நிலையே காலம் கடந்த நிலை. சிவன் மனம் கடந்தவன். ஆகையினால் காலத்தை கடந்தவன் ஆகிறான். காலத்தை கடந்தவனாலேயே காலத்தை ஆளமுடியும். காலனை காலால் உதைத்ததால் காலத்தை வென்றவன் ஆகிறான். சீவன் காலத்தை(மனதை) கடந்தால் சிவன் ஆகலாம்.

## மந்திரம் 3

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடும் நாதனை நாள்தொறும்
பக்கநின் றார்அறி யாத பரமனைப்
புக்கநின் றுன்னியான் போற்றிசெய் வேனே.

### பிரித்து எழுதுதல்:

ஒக்க நின்றானை உலப்பிலி தேவர்கள்
நக்கன் என்று ஏத்திடும் நாதனை நாள்தொறும்
பக்க நின்றார் அறியாத பரமனைப்
புக்க நின்று உன்னியான் போற்றி செய்வேனே.

### பதப்பொருள்:

ஒக்க நின்றானை — நமக்கு சமமாக நம்முள் உடன் நின்று துணை புரிபவன்
உலப்பிலி — அழிவில்லாதவன் ( சிவனைக் குறிப்பிடுகிறது).இது பெயர்ச்சொல்.
தேவர்கள் — வானுலகத்தில் வசிப்பவர்கள்
நக்கன் — இது சிவனின் ஒரு நாமம். இதன் பொருள் - நகு+அன் = நக்கன் எனலாம்.
நகுதல்என்றால் மகிழ்தல் அல்லது ஒளிவிடுதல் எனப் பொருள். அதாவது நக்கன் என்றால்மகிழ்ச்சியானவன், ஒளிமயமானவன் எனலாம்.
ஏத்திடும் — துதிக்கும், புகழும்,வாழ்த்தும்,போற்றும்
நாதனை — தலைவனை
பக்க நின்றார் — அதனது அருகாமையில் இருக்கும் விண்ணவர்களும்
அறியாத — அறிய இயலாத
பரமனை — சிவபெருமானை
நாள்தொறும் — தினமும்
புக்க நின்று — நேசத்துடன், விசுவாசத்துடன், பக்தியுடன்
யான் — மூலனாகிய நான்
உன்னி — மிகுந்த ஈடுபாட்டுடன்
போற்றி செய்வேனே — போற்றி வழிபடுவேனே!!

### சாரம்:

அனைத்து உயிர்களிலும் உயிர்களுக்கு ஏற்ப, சமமாக இறங்கி வந்து,உடன் உள் நின்று, துணைபுரிபவன், அழிவில்லாதவன், தேவர்கள் நக்கன் என்று சொல்லி துதிக்கும், புகழும், போற்றியும், வாழ்த்தும் தலைவன், தனக்கு அருகாமையில் இருக்கும் விண்ணவர்களும் அறிய இயலாதவன், ஆகிய சிவபெருமானை, அனுதினமும் நான் நேசித்தும், அன்புடனும், பக்தியுடனும் , மிகுந்த ஈடுபாட்டுடன் போற்றி வழிபடுவேனே!!.

### விளக்கம்:

முதலில் சிவபெருமானை நான்கு விதமாக வர்ணித்து பின்பு அத்தகையவனை வழிபடுகிறேன் என்கிறார் மூலர்.
சிவன் அனைத்து உயிர்களிலும், உயிர்களுக்கு சமமாக இறங்கி, ஒன்று சேர்ந்து, கூடி, உடன் நின்று துணைபுரிபவன் என்கிறார்.
அவனை அழிவில்லாதவன் என்கிறார். உலப்பிலி என்றால் அழிவில்லாதவன் என்று பொருள்.முதல் வரியில் உலப்பிலி தேவர்கள் என்று இருப்பதால், பலர் அழிவில்லாத தேவர்கள் என்று விளக்கம் அளிக்கிறார்கள். இது சரியில்லை எனக் கருதுகிறேன். காரணம் உலகில் அழிவில்லாதவன் சிவன் ஒருவனே. மற்ற அனைவருக்கும் அழிவுண்டு, தேவர்கள் உள்பட. எனவே உலப்பிலி என்பது சிவனை வர்ணிக்கும் சொல் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

தேவர்கள் அவனை நக்கன் என்ற நாமம் சொல்லி துதிக்கின்றனர்.நக்கன் என்றால் பல உரைகளில் ஆடையில்லாதவன் என்று இருக்கிறது. இதையும் சற்று வித்தியாசமாக பார்ப்போம். நக்கன் எனில் நகு+அன். நகுதல் எனும் சொல்லுக்கு பல அர்த்தங்களில் மகிழ்தல், ஒளிவிடுதல் என்றும் பொருள் இருப்பதாக அகராதி கூறுகிறது. அதாவது இறைவன் என்றும் மகிழ்ச்சியானவன், ஒளிமயமானவன் என கொள்ளலாம்.
திருஞானசம்பந்தர் முதல் திருமுறையில், திருப்பழனம் எனும் பதியில், சிவனை “ வேதமோதி வெண்ணூல்பூண்டு .... என துவங்கி..... நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே” என்று சிவனை நக்கன் என்கிறார் ஞானசம்பந்தர்.

சிவனுக்கு வெகு அருகாமையில் இருக்கும் விண்ணவர்கள் கூட அவனை அறிய இயல வில்லையாம்!. இக்கருத்தை மாணிக்கவாசகரும் திருவாசகத்தில் பல இடங்களில் பாடியுள்ளார். அவற்றில் ஒரு பாட்டை மட்டும் இங்கு பார்ப்போம். திருத்தெள்ளேணம் என்ற பதிகத்தில் பாடியது.

“ ஆ!ஆ! அரி, அயன், இந்திரன், வானோர்க்கு அரிய சிவன்
‘வா,வா’ என்று என்னையும் பூதலத்தே வலிந்தாண்டு கொண்டான்
பூவார் அடிச்சுவடு என் தலைமேல் பொருத்தலுமே
தேவானவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.”

அத்தகைய சிவன் என்னை வலியவந்து ஆட்கொண்டான், இதற்கு நான் என்ன கைமாறு செய்வேன் என்கிறார் மணிவாசகர்.
இவ்வாறு நான்கு விதமாக சிவனை வர்ணித்து பின்பு மூலர் சொல்கிறார் —

அத்தகைய பரமனை, சிவபெருமானை, நான் நாள்தொறும் அன்புடனும், பக்தியுடனும், மிகுந்த ஈடுபாட்டுடன் போற்றி வழிபடுவேன்.
பாடலின் 4வது வரியில் உன்னியான் என்று இருக்கிறது. உன்னி என்பது ஒரு பொருளை மேன்படுத்தும் சொல். உதாரணமாக உன்னிப்பாக கவனி - கூர்மையாக கவனி, உன்னதமானவன் -நல்ல குணமுடையவன், உன்னிப்பான பேச்சு - சிறந்த பேச்சு.
அதுபோல இங்கு “உன்னியான் போற்றி செய்வேனே” என்றால் நான் மிகுந்த ஈடுபாட்டுடன் போற்றி வழிபடுவேன் எனப் பொருள் கொள்ளவேண்டும்.

## சுருக்கம்:

சிவனை நான் அன்புடனும் பத்தியுடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் போற்றி வழிபடுவேன்.

## சிந்தனைக்கு:

இறைவன் சிவபெருமான் பிறப்பில்லாதவன். அதனால் இறப்பில்லாதவன். தேவர்களுக்கு புலப்படாதவன். நம்மிடம் இருக்கின்ற புலன்களால் (தேவர்கள்) இறைவனை அடையமுடியாது.

இறையருள் இல்லாமல் அவனை தரிசிக்க முடியாது. அன்பு எனும் பக்தியின் (எதிர்பார்ப்பு இல்லாத அன்பு, சேவை ) மூலமாக இறையருளைப் பெறலாம்.

## மந்திரம் 4

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்றனைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே.

பிரித்து எழுதுதல்:

அகலிடத்தார் மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத்து என்தனைப் போதவிட்டானைப்
பகலிடத்தும் இரவும் பணிந்து ஏத்தி
இகலிடத்தே இருள் நீங்கி நின்றேனே.

பதப்பொருள்:

அகலிடத்தார் — அகல் எனில் பூமி. அகலிடத்தார் எனில் இப்பூமியில் வாழும் உயிர்களுக்கு
மெய்யை — மெய்ப்பொருள் ஆனவனை, உண்மைப்பொருளை
அண்டத்து வித்தை — அண்டங்கள் அனைத்துக்கும் மூலபொருளானவனை(மரத்துக்கு விதை போல)
விள்+து=வித்து - வெளிப்படக் கூடியது. விரிவடையக்கூடியது. மலருவது.
புகலிடத்து — அடைக்கலம் ஆகும் இடம், தஞ்சம் அடையும் இடம். இப்பாடலில் இதன் பொருள் - உயிர்கள் அனைத்தும் இறுதியில் சரணடையும், சேரும் இடம் - இறைவனது திருவடிகள்.
என்தனை — என்னை
போதவிட்டானை — ஞானம், மெய்அறிவைக் கொடுத்தவனை
பகலிடத்தும் இரவும் பணிந்து ஏத்தி — பகலிலும் இரவிலும் இடைவிடாது வணங்கி, வழிபட்டும்
இகலிடத்தே இருள் நீங்கி — இவ்வுலகத்தார் அறியாமையில் சிக்கி மீளமுடியாமல் தவிக்க, இறை அருளால் எனது அறியாமை நீங்க
நின்றேனே — இறைவனது திருவடிகளை நினைத்து நின்றேனே!!.

சாரம்:

இப்பூமியில் வாழும் உயிர்களுக்கு மெய்ப்பொருள் ஆனவனை,
அண்டங்கள் அனைத்துக்கும் மூலபொருளானவனை,
உயிர்கள் அனைத்தும் இறுதியில் சரண் அடையும் இடமான, இறைவனது திருவடிகளை அடையும்
ஞானத்தை கொடுத்தவனை, பகலிலும் இரவிலும் இடைவிடாது வணங்கி வழிபட்டு,
இவ்வுலகத்தார் அறியாமையில் சிக்கி மீளமுடியாமல் தவிக்க, இறை அருளால் எனது அறியாமை நீங்க
இறைவனது திருவடிகளை நினைத்து நின்றேனே!!.

விளக்கம்:

இப்பாடல் முழுவதும் பல்வேறு இடங்களை ஒட்டிப் பாடியுள்ளார் மூலர், அகலிடம், புகலிடம், பகலிடம், மற்றும் இகலிடம்.

இவற்றை சற்று சிந்திப்போம்.
இப்பூமியில்(அகலிடம்)வாழும்அனைவருக்கும் மெய்ப்பொருள் ஆனவன் சிவன், மெய்யே என பாடுகிறார்.
மணிவாசகர் சிவபுராணத்தில் இதையே " ....மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்..." என இவரும் இறைவனை மெய்யே என்று போற்றுகிறார்.

அண்டத்து வித்தை என்கிறார் மூலர். சிறிய விதை முளைவிட்டு செடியாகி, பின்பு பெரிய ஆலமரமாகிறது. அதுபோலே சிவபெருமான் என்ற விதையிலிருந்து அண்டமே உருவாகி விரிந்து கொண்டே இருக்கிறது. வித்து எனில் வெளிப்படக்கூடியது, விரிவடையக்கூடியது எனலாம். சிவனை வித்தகன் என்கிறார் மணிவாசகர்.
"... கிளிவந்த மென்மொழியள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மால் அயனும் காண்பரிய வித்தகனை..." திருஅம்மானையில் மணிவாசகர்.
" .. உத்தர கோசை மங்கையுள் இருந்து
வித்தக வேடம் காட்டிய இயல்பும்..." கீர்த்தி திருஅகவலில் மணிவாசகர்.

அடுத்து புகலிடத்து என்தனை போதவிட்டானை என்கிறார் மூலர். உலகத்தார் அனைவரும் இறுதியில் சரணடையும் இடம்(புகலிடம்), சேரும் இடம் சிவனது திருவடிகள். ஆக உனது திருவடிகளை அடையும் ஞானத்தை, அறிவை எனக்குக்கொடுத்து வழிகாட்டியவனை என்று தான் ஞானத்தைப்பெற்றதை நமக்கு கூறுகிறார் மூலர்.
இதற்கு ஒப்பாக
".... போற்றி ஓம் நமச்சிவாய! புகலிடம் பிறிது ஒன்று இல்லை.." — திருச்சதகத்தில் மணிவாசகர்.

மெய்ப்பொருளான சிவனை அண்டங்களுக்கு மூலப்பொருளான சிவனை, ஞானத்தைப்பெற்ற பயனாக நான் பகலிலும் இரவிலும் தொடர்ந்து அவனை பணிந்து ஏத்தி வழிபட்டேன் என்கிறார் மூலர்.
உலகத்தார் மாயையில் சிக்கி, பகை உணர்வு, வேற்றுமை, பொறாமை, வெறுப்பு, ஆணவம் போன்றவற்றில் சுழந்து, வினைகளை பெறுக்கி, துன்பத்தில் இருக்க, நான் இறைவனை பணிந்ததனால் எனது அறியாமை எனும் இருள் நீங்க இறைவனது திருவடிகளை நிலைத்து நின்றேன். அதாவது முத்தி அடைந்தேன் என்கிறார் மூலர், முதன்முறையாக திருமந்திரத்தில்!.
தனது முதல் பாட்டில் இறைவனை உணர்ந்து முத்தியை எட்ட முயல்வாயாக என்றார். இந்த நான்காவது பாட்டில் முத்தியை எட்டினேன் என்று உறுதியாக கூறுகிறார் மூலர்.( அவரது திருவடிகளை வணங்குகிறேன்.)

## சுருக்கம்:

சிவபெருமான் ஞானத்தை எனக்கு கொடுக்க அவனை தொடர்ந்து வழிபட அறியாமை விலகி
சிவபெருமானது திருவடிகளை நிலைத்து நின்றேன் என்கிறார் மூலர்.

## சிந்தனைக்கு:

இறைவன் சீவர்களை படைக்கும்பொழுது தன்னை அறிய முடியாத வண்ணம் அறியாமையை அவன் படைத்தான்.
சீவன் அறியாமையினால் உலகை தவறாக (அத்யாரோபம்) புரிந்து கொள்கிறான். அதனால் துன்பத்திற்கு (அனர்த்தம்) உள் ஆகிறான்.
துன்பத்திலிருந்து விடுபட சீவனுக்கு ஒரேவழி இரவும் பகலும் இறைவன் திருவடியை வழிபடுவதே. இதன் மூலமாகத்தான் மூலர் ஞானம் பெற்று இறைவன் திருவடியை அடைந்தார்.

(அறியாமை ——> அத்யாரோபம் ——> அனர்த்தம்)

## மந்திரம் 5

சிவனோடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனோடொப் பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரையானே!

### பிரித்து எழுதுதல் :

சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்த அன்று பொன் ஒளி மின்னும்
தவனம் சடைமுடித் தாமரையானே!

### பதப்பொருள்:

சிவனோடு — சிவனுடன்
ஒக்கும் — ஒப்பான, நிகரான
தெய்வம் - வானுலகம், விண்ணுலகம் போன்ற உலகங்களில் இருக்கும் தெய்வங்கள்
தேடினும் இல்லை — தேடினாலும் கிடைக்கவில்லை.
அவனோடு — அந்த சிவனோடு
ஒப்பார் — நிகரானவர்
இங்கு — இப்பூவுலகில்
யாவரும் இல்லை — ஒருத்தரும் இல்லை
புவனம் — உலகம்
கடந்த — அப்பால்
அன்று — அன்றொரு நாள்
பொன்னொளி மின்னும் — பொன்னிற ஒளிமயம் தீப்பிழம்பாய்
தவனச்சடைமுடி — தீயைப்போல் வெப்பமுடைய சடைமுடி(சிவனது)
தாமரையானே — தாமரை மலர் போல் திருவடி உடையவனே!

### சாரம்:

சிவபெருமானுக்கு ஈடான நிகரான தெய்வம் - வானுலகம், விண்ணுலகம், பூவுலகம், ஆக எங்கு தேடினும் இல்லை. அவனுக்கு நிகர் அவனே!.
இதற்கு ஒரு உதாரணமாக புராணத்தில் ஒரு சம்பவத்தை குறிப்பிடுகிறார் மூலர்.
ஒருமுறை பிரமனும் திருமாலும் சிவனது வெப்பமான சடைமுடியையும் தாமரைமலர் போன்ற திருவடியையும் முறையே காணச்சென்றனர்.
முடிவில் காணமுடியாமல் தங்களது இயலாமையை உணர்ந்தனர்.

### விளக்கம்:

சிவபெருமானுக்கு நிகராக யாரையும் ஒப்பிடமுடியாது. அவனுக்கு நிகர் அவனே!. ஒன்றவன் தானே!!. பின்பு தான் மற்றவர். அவனுக்கு ஒப்பார் எந்த உலகில் தேடினாலும் இல்லை.
திருவள்ளுவர் இக்கருத்தை அதனது குறள் கடவுள் வாழ்த்தில் “ தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்…” என்று சிவனது ஒப்பிலாத்தன்மையை வர்ணிக்கிறார்.
மணிவாசகரும் பிடித்த பத்து என்ற பதிகத்தில் “ அம்மையே அப்பா! ஒப்பிலாமணியே!” என்றும் “ ஒப்பு உனக்கு இல்லா ஒருவனே” என்றும் பாடுகிறார்.

சிவன் நிகரில்லாதவன் என்பதற்கு எடுத்துக்காட்டாக புராணத்திலிருந்து ஓர் நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடுகிறார் மூலர்.

ஒருமுறை பிரமனுக்கும் திருமாலுக்கும் இடையே யார் பெரியவர் என்ற வாக்குவாதம் உண்டாயிற்று. அது முற்றி போரில் முடிந்தது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த பரம்பொருள் சிவபெருமான் அவர்கள் முன் ஓர்(அனல்) தீபிழம்பாகக்காட்சியளித்தார். அந்த தீபிழம்பு ஆகாயத்திலும் எல்லா அண்டங்களிலும் பரவி நின்றது. ( புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்) யானே கடவுள் என்று போர் புரிந்த பிரமனும் திருமாலும் அந்த சோதிப் பிழம்பைப் பார்த்து அதனுடைய அடியையும் முடியையும் காண்பவர்களே அவர்களில் முதல்வரானார் என்று ஒப்பந்தம் செய்து கொண்டனர். திருமால் வராக வடிவம் கொண்டு நிலத்தை பிளந்து பல்லாயிரம் ஆண்டுகளாகப்பாதாளத்தில் பல பாகங்களுக்கு சென்று அந்த சோதிப்பிழம்பின் அடியைக்காண முற்பட்டார். கடைசியில் தோல்வியே மிஞ்சியது. அதேபோல் பிரம்மனோ அன்னப்பறவை உருவம் எடுத்து பல்லாயிரம் ஆண்டுகள் அந்த சோதிப்பிழம்பின் முடியைக்காணவேண்டும்( தவனச் சடைமுடி) என்கிற நோக்கத்துடன் முடியை நோக்கிப்பறந்து கொண்டே இருந்தார். ஆயினும் முடியை காணாமல் தோல்வியே கிட்டியது.( தெய்வத்தின் குரல் - காஞ்சி பெரியவா கூறியது).

இச்சம்பவம் சிவபெருமானே ஒப்பில்லாதவன்
என்று காட்டுகிறது. மேற்கூறிய இச்சம்பவத்தை மணிவாசகர் திருவாசகத்தில் பல இடங்களில் மேற்கோள் காட்டுகிறார்.
“ மாலறியா நான்முகனும் காணா மலையினை ...” என்று திருவெம்பாவையிலும்,
“ அரியோடு பிரமற்கு அளவறி ஒண்ணான்.....” என்று கீர்த்தி திருஅகவலிலும் பாடுகிறார்.

இதனால் மற்றவர்கள் தெய்வம் இல்லை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. மற்றவர்களும் சிவனது படைப்புகள் தானே!

சுருக்கம்:

சிவனுக்கு நிகரான, ஒப்பான தெய்வம் எந்த அண்டத்திலும் இல்லை. அவன் ஒருவனே முதலானவன்.

சிந்தனைக்கு:

சைவத்தைப் பொறுத்தளவில் சிவனே முழுமுதல் கடவுள். வைணவத்தைப் பொறுத்தளவில் விஷ்ணுவே முழுமுதல் கடவுள். இதைப் போலத்தான் மற்ற பிரிவுகளிலும் அந்தந்த தெய்வங்களே பிரதான கடவுள்கள். இறுதியாக இருப்பது ஒரே தெய்வம். அவனுக்கு ஒப்பார் யாரும் இல்லை. அவன் அனைவருக்குள்ளும் பொன் ஒளியாய் ஒளிர்ந்து கொண்டு இருக்கிறான். அவன் அருளாலே அவனை தரிசிக்க முடியும்.

## மந்திரம் 6

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றி செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறியேனே.

பிரித்து எழுதுதல்:

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றி செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவது ஒன்றில்லை
அவனன்றி ஊர் புகுமாறு அறியேனே.

## பதப்பொருள்:

அவனை — சிவபெருமானை
ஒழிய —- தவிர
அமரர் — அழிவில்லாதவர், இறவாதவர்
இல்லை — ஒருத்தரும் இவ்வண்டத்தில் இல்லை.
அவனன்றி - அவனை நினைக்காமல்
செய்யும் அருந்தவம் — மிகவும் நேர்த்தியுடன், சிரத்தையுடன் செய்யப்படும் தவம்
இல்லை — பயனில்லை.
அவனன்றி — அவனது அருளின்றி
மூவரால் — மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, மற்றும் உருத்திரன்.
ஆவது — ஆகப்படுவது, ஆகப்பெறுவது
ஒன்றில்லை — ஒன்றும் இல்லை
அவனன்றி — அவனது அருளின்றி
ஊர் — வீடு பேறு , முத்தி
புகுமாறு — அடையும் நெறிகள், வழிகள்
அறியேனே — எனக்குத்தெரியவில்லை.

## சாரம்:

சிவபெருமானை தவிர அழிவில்லாதவர், இறவாதவர் ஒருத்தரும் இவ்வண்டத்தில் இல்லை.
அவனை நினைக்காமல் மிகவும் நேர்த்தியுடன், சிரத்தையுடன் செய்யப்படும் தவம் பயனில்லை.
அவனது அருளின்றி மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, மற்றும் உருத்திரன் ஆகியோரால் ஆகப்படுவது, ஆகப்பெறுவது ஒன்றும் இல்லை
அவனது அருளின்றி வீடு பேறு , முத்தி அடையும் நெறிகள், வழிகள் எனக்குத்தெரியவில்லை.

## விளக்கம்:

அமரர் யார்?
யாரொருவர் இறவாதவரோ அல்லது அழிவில்லாதவரே அவரே அமரர் ஆவார்.
ஊழிக்காலத்தில் அனைத்து ஜீவராசிகளும், உயிரற்ற பொருட்களும் அழிந்து சிவபெருமானிடம் ஒடுங்குகின்றன. பின்பு சிவபெருமான் மீண்டும் படைத்தல் ஆரம்பிக்கிறார்.
ஞானசம்பந்தர் இதை திருவீழிமழலையில் “ .... ஈறாய் முதல் ஒன்றாய்.... “ என அழகாக இறுதியில் அவன் ஒருவனே இருக்கிறான் என்று பாடுகிறார்.
ஆக சிவபெருமான் ஒருவனே அமரர் என்று கூற வல்லவர். ஆகவே தான் மூலர் இப்பாட்டில்

அவனை  ஒழிய அமரரும் இல்லை என்கிறார்.

தவத்தின் நோக்கம் என்ன?
இவ்வண்டமும் அண்டத்தில் உள்ள அனைத்து உயிர்களும், உயிரற்ற பொருட்களும் உருவாக காரணமான
மூல ஆற்றலை பற்றி விழிப்புணர்வு பெறுதலும், அவ்வாற்றலை வாழ்வில் பயன் படுத்தலும் தவம் ஆகும்.
மூல ஆற்றல் சிவபெருமானே. ஆக தவத்தின் நோக்கம் சிவனை உணர்வது.
ஆகவே அவனை நினைக்காது எவ்வளவு கடும்  முயற்சி செய்தாலும் எவ்வாறு தவம் பயனலிக்கும் என்கிறார் மூலர்.

சிவபெருமான் தனது படைத்தல், காத்தல், மற்றும் அழித்தல் தொழில்களை நடத்த முறையே பிரம்மா, விஷ்ணு , உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளை சக்தியுடன் இனைந்து படைக்கிறார்.
அவ்வாறு இருக்கையில் சிவனது அருளன்றி எவ்வாறு மும்மூர்த்திகளால் தொழில் புரியமுடியும்?
அதைதான் “ அவனன்றி மூவரால் ஆவது ஒன்றில்லை “ என்கிறார் மூலர்.

சிவபெருமான் தனது திருவடிகளை அடைய( வீடு பேறு) நான்கு நெறிகளை வகுத்துள்ளான் என்று முதல் பாட்டில் மூலர் பாடியுள்ளார்.
அவ்வாறு இருக்கையில் அவனது அருளின்றி அவனது திருவடிகளை அடைய வேறு வழிகள் இருப்பதாக எனக்கு தெரியவில்லை என்கிறார் மூலர்.
இதை உறுதிப்படுத்தும் வகையில் “ … அவனருளாலே அவன் தாள் வணங்கி….” என்று பாடுகிறார் மணிவாசகர் சிவபுராணத்தில்.

சுருக்கம்;

சிவனது அருள் இருந்தால் தான் வீடு பேறு அடைய முடியும்.

சிந்தனைக்கு:

இந்தப் பிரபஞ்சத்தில் தோன்றியவை அனைத்தும் மறைந்தே ஆக வேண்டும். இது நியதி. சிவபெருமான் சுயம்பு ஆனவர். ஆகையினால் அவருக்கு அழிவு இல்லை. சிவபெருமானே சாத்யவஸ்து(அடையப்பட வேண்டியது). சிவனை அடைவதற்கு சாதனமும் அவனே. அவனை ஸ்மரணம்(உணர்வு) செய்வதின் மூலமாகத்தான் அவனை அடையமுடியும். அவனை அடைந்தவர்கள் அவனன்றி வேறு யாரும் இல்லை என்பதை அறிந்து கொள்கிறார்கள்.

## மந்திரம்  7

முன்னைஒப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னைஒப் பாய்ஒன்றும் இல்லாத் தலைமகன்
தன்னைஅப் பாயெனில் அப்பனு மாயுளன்
பொன்னைஒப் பாகின்ற போதகத் தானே.

பிரித்து எழுதுதல்:

முன்னை ஒப்பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத தலைமகன்
தன்னை அப்பா எனில் அப்பனுமாய் உளன்
பொன்னை ஒப்பாகின்ற போதகத்தானே.

## பதப்பொருள்:

முன்னை — உலகங்கள் தோற்றுவிப்பதற்கும் முன்பே பழமையாகவே
ஒப்பாயுள்ள — சமநிலையில் வைத்து எண்ணப்படும்
மூவர்க்கு மூத்தவன் — மும்மூர்த்திகள் பிரமன், திருமால், மற்றும் உருத்திரன் ஆகியோருக்கும் பழமையானவன்.
தன்னை ஒப்பாய் — தனக்கு ஈடாக, ஒப்பாக, சம்மாக,
ஒன்றும் இல்லாத — யாரும் இல்லாத
தலைமகன் — முதல்வன்
தன்னை — சிவபெருமானை
அப்பா எனில் — அப்பா என்று அழைத்தால்
அப்பனுமாய் உளன் — அப்பனாக வந்து அருள்புரிவான்
பொன்னை — தங்கம்
ஒப்பாகின்ற — போன்று
போதகத்தானே — உள்ளத்தாமரையில் ஒளிவீசும் சிவபெருமானே.

## சாரம்:

உலகங்கள் தோற்றுவிப்பதற்கும் முன்பே பழமையாகவே, சமநிலையில் வைத்து எண்ணப்படும்
மும்மூர்த்திகள் பிரமன், திருமால், மற்றும் உருத்திரன் ஆகியோருக்கும் பழமையானவன் சிவபெருமான்.
தனக்கு ஈடாக, ஒப்பாக, சம்மாக, யாரும் இல்லாத முதல்வன் அவன்.
அவனை அப்பா என்று அன்புடன் அழைத்தால் அப்பனாக வந்து அருள்புரிவான்.
அவன் நமது உள்ளத்தாமரையில் தங்கம் போன்று ஒளிவீசிக்கொண்டிருக்கிறான்.

## விளக்கம்:

ஒன்றாய் இருந்த சிவன், சக்தியுடன் இரண்டாகி, இருவரும் இணைந்து படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களை செயல்படுத்த பிரம்மா, திருமால், மற்றும் உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளை சமநிலையில் தோற்றுவித்தனர். இவர்கள் உலகங்களெல்லாம் படைப்பதற்கு முன்பிருந்தே இருந்ததால் இவர்களை “முன்னை” என்று பாடுகிறார் மூலர். மேலும் இம்மூவரும் சிவனிடமிருந்து தோன்றியதால் சிவன் இவர்களுக்கு மூத்தவன் என்கிறார் மூலர்.
மணிவாசகர் கீர்த்தித்திருஅகவலில்
“.... ஆதிமூர்த்திகட்கு அருள்புரிந்தருளிய
தேவதேவன் திருப்பெயர் ஆகவும்...” என்று சொல்லி சிவனுக்கு தேவதேவன் என அழகான நாமம் வைக்கிறார்.

மூலர் தனது பாடல் 5இல் சிவனுக்கு ஒப்பான தெய்வங்களோ அல்லது வேறு யாரும் இப்பாரில் இல்லை என்று பாட, அதை இங்கும் “ தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத தலைமகன்” . என்று சொல்லி வலியுறுத்துகிறார். இறைவனை தலைமகன் எனவும் வர்ணிக்கிறார்.
“ .. கற்றானை கங்கைவார் சடையன்தன்னை
மற்றாரும் தன்னை ஒப்பாரில்லாதானை....” என நாவுக்கரசர் சிவனை தேவாரத்தில் இதற்கு ஒப்ப போற்றுகிறார்.
“ ... அம்மையே அப்பா! ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே” ... பாடுவது மணிவாசகர் பிடித்தபத்தில்.

மேலும் நாம் சிவபெருமானை அப்பா என்று அன்புடன் வேண்டினால் கண்டிப்பாக அப்பாவாக வந்து நமக்கு அருள் புரிவான் என்கிறார் மூலர்.
அருளாளர்கள் பலர் சிவனை அப்பா என்று போற்றுகின்றனர்.
“.... ஈசனடி போற்றி, எந்தை( என் தந்தை) அடி போற்றி..” சிவபுராணம்
“ என் அப்பன் என் ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி...” மணிவாசகர் திருக்கோத்தும்பீ.
“ .. அப்பன் நீ, அம்மை நீ , ஐயனும் நீ,
அன்புடைய மாமனும் மாமியும் நீ...” தேவாரத்தில் திருநாவுக்கரசர்.
“ அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்...” வள்ளலார்.

இத்தகைய அப்பாவாக வந்து அருள்புரியும் இறைவன் நமது உள்ளத்தாமரையில் தங்கம் போன்று ஒளிவீசிக்கொண்டிருக்கிறான்.

சுருக்கம்:

நமது உள்ளத்தாமரையில் தங்கம் போன்று ஒளிவீசிக்கொண்டிருக்கும் சிவபெருமான், நாம் அப்பா என்று அவனை அன்புடன் அழைக்க, அப்பனாக வந்து அருள்புரிவான்.

சிந்தனைக்கு:

பானை செய்வதற்கு முன்னால்(ப்ராக் அபாவ:) மண் இருந்தது. பானை உடைந்த பிறகும்(ப்ரத்வம்ஸ அபாவ:)மண் இருப்பது போல உலகம் தோற்றத்திற்கு முன்னும்,உலகம் அழிந்த பிறகும் இருப்பது இறைவன் ஒருவனே. அவனை ‘அப்பா’ என உறவு வைத்து அழைத்து வாழ்வதின் மூலமாக இதயத்தில் அவன் உறைந்திருப்பதை நம்மால் அனுபவிக்க முடியும்.

## மந்திரம் 8

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வாரில்லை
சேயனும் அல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

பிரித்து எழுதுதல்:

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை
சேயினும் நல்லன் அணியன் நல்அன்பர்க்கு

தாயினும் நல்லன் தாழ் சடையோனே.

## பதப்பொருள்:

தீயினும் வெய்யன் — தீயைக்காட்டிலும் வெப்பமானவன்
புனலினும் தண்ணியன் — புனல் என்றால் தண்ணீர். ஆக தண்ணீரைக்காட்டிலும் குளிர்ச்சியானவன்.
ஆயினும் — இருந்தாலும்
ஈசன் — சிவபெருமான்
அருள் — கருணை
அறிவார் இல்லை — உலகத்தார் அவனை அறியவில்லையே!
சேயினும் நல்லன் — நம் குழந்தைகளைக்காட்டிலும் நல்ல குணம்படைத்தவன்
அணியன் —- நம் பக்கத்திலேயே இருப்பவன்
நல்அன்பர்க்கு — சிவனடியார்களுக்கு
தாயினும் நல்லன் — தாயைவிட சிறந்த அன்பானவன்
தாழ் சடையோனே — நீண்ட சடையுடைய சிவபெருமானே.

## சாரம்:

தீயினும் வெப்பமானவனும், நீரைவிடக்குளிர்ச்சியானவனும் ஆன சிவனது கருணையை உலகத்தார் அறியவில்லையே!.
நம் குழந்தைகளைக்காட்டிலும் நல்ல குணம்படைத்தவன்,நம் பக்கத்திலேயே இருப்பவன்.
சிவனடியார்களுக்கு தாயைவிட சிறந்த அன்பானவன் நீண்ட சடையுடைய சிவபெருமானே.

## விளக்கம்:

உலகத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் வாழ்வதற்கும் இயங்குவதற்கும் தட்ப வெப்ப நிலை இன்றியமையாதது. இதை அருளியவன் சிவபெருமான். அவன் தீயைக்காட்டிலும் வெப்பமானவன். தீயினுள் இருக்கும் வெப்பமும் அவனே!. அதேசமயம் தண்ணீரைக்காட்டிலும் குளிர்ச்சியானவன். நீருக்குள் இருக்கும் குளிர்ச்சியும் அவனே!.
ஆகவேதான் மணிவாசகர் "... வெய்யாய்! தணியாய்! இயமானனாம் விமலா.." என்று சிவபுராணத்தில் சிவனைப் பாடுகிறார். மேலும் "...திண்திறல் தீயில் வெம்மை வைத்தோன்.." என்று திருஅண்டப்பகுதியில் தீயினுள் இருக்கும் வெப்பமும் அவனே என்கிறார்.

இவ்வாறு சிவபெருமான் நாம் வாழ வழிசெய்தும் நாம் அவனது கருணையை உணரவில்லையே என்று வருந்துகிறார் மூலர்.

குழந்தைகளது உள்ளம் தூய்மையானது. அதைவிட தூய்மை இறைவனது உள்ளம் என்கிறார் மூலர்.
சிவன் எப்போதும் நம் பக்கத்திலேயேதான் இருக்கிறார் என்கிறார் மூலர். இதையே மணிவாசகரும்
"..... ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!..." என்று சிவபுராணத்தில் பாடுகிறார்.

நீண்ட சடையுடைய சிவன், சிவனடியார்களுக்கு தாயைவிட சிறந்த அன்பானவன் எனகிறார் மூலர்.
இக்கருத்தை மணிவாசகரும் திருவாசகத்தில் பல இடங்களில் கூறுகிறார்.
"... தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!..." சிவபுராணத்தில்.

“... பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை ....” பிடித்தபத்தில்.

சுருக்கம்:

நாம் சிவனது அருளை உணராவிட்டாலும் அவன் நமக்கு அருகிலேயே இருந்து அருள்புரிகிறான்.

சிந்தனைக்கு:

தவறு செய்தால் தண்டிப்பவன்(தண்டிப்பதின் மூலமாக சீவனை நல்வழிப் படுத்த முடியும்),நல்லது செய்தால் அரவணைப்பவன் சிவனே. சிவன் தூய உள்ளம் கொண்டவன்.
அவனை சார்ந்து இருக்கும் உள்ளங்களை தூய்மைப் படுத்துபவன் சிவனே. கருணை உள்ளம் கொண்ட சிவன், பாரபட்சம் இல்லாமல் அனைவருக்கும் சமமாய் அருள் பாலிப்பவன்.
அம்மா என்பவள் தன் பிள்ளைகள் மீது மட்டுமே அக்கறை கொள்பவள். ஆனால் தாய் என்பவள் அனைவரின் மீதும் அக்கறை கொள்பவள். தாயினும் நல்லன் அவன் சிவன் ஆவான்.

## மந்திரம் 9

பொன்னால் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே.

## பிரித்து எழுதுதல்:

பொன்னால் புரிந்திட்ட பொன் சடை என்ன
பின்னால் பிறங்க இருந்தவன் பேர் நந்தி
என்னால் தொழப்படும் எம் இறை மற்றவன்
தன்னால் தொழப்படுவாரில்லை தானே.

## பதப்பொருள்:

பொன்னால் புரிந்திட்ட— தங்கத்தால் செய்தது போன்று
பொன் சடை என்ன — செம்பொன் நிற சடை
பின்னால் பிறங்க இருந்தவன்— தனக்குப்பின்னால் சுடர்விட்டு பிரகாசித்து இருப்பவன்
பேர் நந்தி — அவன் பெயர் நந்தி.
என்னால் தொழப்படும்— நான் தொழும், வணங்கும்
எம் இறை — எனது இறைவன் சிவபெருமான்
மற்றவன் தன்னால் தொழப்படுவாரில்லை தானே — அவனால் தொழப்படும் தெய்வம் பிறர் யாரும் இல்லையே!

## சாரம்:

தங்கத்தால் செய்தது போன்று செம்பொன் நிறத்தில் தனக்குப்பின்னால் சுடர்விட்டு பிரகாசிக்கும் நீண்ட சடையுடன் இருப்பவன் இறைவன். அவனது திருநாமம் நந்தி. நான் தொழும், வணங்கும் இறைவன் நந்தி எனப்படும் சிவபெருமான். ஆனால் அவனால் தொழப்படும் தெய்வம் பிறர் யாரும் இல்லையே!

## விளக்கம்:

சிவபெருமானது சடைமுடி அழகை சில பாடல்களில் வர்ணித்து வருகிறார் மூலர்.
பாடல் 5இல் " பொன்னொளி மின்னும் தவனச் சடைமுடி தாமரையானே" என்கிறார்.
பாடல் 8இல் " தாழ்சடையானே" - நீண்ட சடையுடையவன் என்கிறார்.
இவரது அழகிய சடையை இப்பாடலில் "பொன்னால புரிந்திட்ட பொன் சடை என்ன பின்னால் பிறங்க" என்கிறார். அதாவது இறைவனது சடைமுடி பொன்னால் செய்தது போன்று தகதக
என்று செம்பொன் நிறத்தில் சுடர்விட்டும் பிரகாசித்தும் தனக்குப்பின்னால் நீண்டு இருக்கின்றன.
இறைவன் துறவிகள் போல சடை வைத்திருப்பது அவனது யோகநிலையைக் காட்டுகிறது- ஞானசொரூபி.

மேலும் தங்கத்தின் குணங்கள் - கம்பிகளாக நீட்டலாம் - சடையை போல்.
தங்கம் வெப்பத்தையும் நன்கு கடத்தும் - பாடல் 8இல் இறைவனை " தீயினும் வெய்யன்" என்கிறார். ஆக வெப்பத்தை கடத்த சடை மிகவும் பயன்படுகிறது. ஆகவே பொன்னுடன் ஒப்பிடுகிறார் மூலர்.
மேலும் பிற அருளாளர்களும் இவரது சடையை பொன்னுக்கு ஒப்பாக பாடுகின்றனர்.
காரைக்கால் அம்மையார் தான் அருளிய அற்புத திருவாந்தாதியில்
" …… ஞான்ற குழற்சடைகள் பொன்வரைபோல் மின்னுவனபோன்ற….." என்று பாடுகிறார்.

இத்தகைய சிறப்புமிக்க சடைமுடி உடைய சிவனது திருநாமம் நந்தி எனப்படும் என்கிறார் மூலர்.
முதலில் பாடல் 3இல் சிவனை நக்கன் என்றார்.
இப்பாடலில் நந்தி என்கிறார்.
நன்+உதி = நந்தி. அதாவது என்னுள் உதிப்பவன் சிவன், ஆகவே ஈசனுக்கு நந்தி என்று பெயர்.

நான் வணங்கும், நான் தொழும், நான் பாடும் சிவன், அவனால் தொழப்படும் தெய்வம் வேறு யாரும் இல்லை என்கிறார் மூலர்.
இக்கருத்தை பாடல் 5இல் " சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை" என்று பாடுகிறார் மூலர்.
இப்பாடலில் இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துகிறார் மூலர்.

**சுருக்கம்:**

சிவபெருமானால் தொழப்படும் தெய்வம் வேறு யாரும் இல்லை
என்கிறார் மூலர்.

சிந்தனைக்கு:

தங்கத்திற்கு தோஷம் கிடையாது. நல் தூய உணர்வுகளை ஏற்றுக் கொள்கின்ற தன்மையும், தீய உணர்வுகளை தவிர்க்கின்ற தன்மையும் தங்கத்திற்கு உண்டு. மனிதனின் பிராணமய கோசத்தின் நிறங்கள் பலவகைப் பட்டது.

சாம்பல நிறம் ஆரோக்கியமற்ற தன்மையையும், வெண்மை நிறம் ஆரோக்கியமான தன்மையையும் சுட்டிக் காட்டுவது போல தங்கநிறம் தூயமனத்தையும், மனம் கடந்த நிலையையும் சுட்டிக் காட்டுகிறது.

சிவபெருமான் மனம் கடந்தவன். சிவனின் தேகமட்டுமில்லாமல், சடைமுடியும் தங்கமயமாக ஜொலிக்கிறது. ஆங்கிலத்தில் '**GOLDEN YOGI**' என்று யோகிகளை வர்ணிப்பதுண்டு. சிவபெருமானோ யோகீஸ்வரன். யோகிகளுக்கு எல்லாம் ஈஸ்வரன்(தலைவன்) ஆவான்.

## மந்திரம் 10

தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவ்ரை தண்கட லாமே.

பிரித்து எழுதுதல்:

தானே இருநிலம் தாங்கி விண்ணாய் நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழைபொழி தையலுமாய் நிற்கும்
தானே தடவ்ரை தண்கடல் ஆமே.

பதப்பொருள்:

தானே — சிவபெருமான் அவனாகவே
இருநிலம் — நமது பெரிய பூமி
தாங்கி — தாங்குபவன்
விண்ணாய் நிற்கும் — ஆகாயமாய் நின்று
சுடும்அங்கி — சுடும் நெருப்பாகவும்
ஞாயிறும் — வெப்பத்தை அளிக்கும் சூரியனாகவும்
திங்களும் — குளிர்ச்சியை அளிக்கும் சந்திரனாகவும்
மழைபொழி — உயிரினங்கள் வாழ மழை பொழிகின்ற
தையலுமாய் நிற்கும் — சக்தியாக நின்று
தட — பெருமை  வாய்ந்த பெரிய
வரை — மலை
தண் — குளிர்ச்சியான
கடல் ஆமே — கடலாகவும் வியாபித்திருக்கிறான்

## சாரம்:

சிவபெருமான் அவனாகவே நமது பெரிய பூமியை தாங்கியும், ஆகாயமாய் நின்றும், சுடும் நெருப்பாகவும், வெப்பத்தை அளிக்கும் சூரியனாகவும், மற்றும் குளிர்ச்சியை அளிக்கும் சந்திரனாகவும்
விளங்குகிறான். மேலும் உயிரினங்கள் வாழ்வதற்கு இன்றியமையாத மழை பொழிகின்ற சக்தியாகவும், பெருமை  வாய்ந்த பெரிய மலையாகவும் மற்றும் குளிர்ச்சியான கடலாகவும் வியாபித்திருக்கிறான்.

## விளக்கம்:

நமது பெரிய பூமி ஆகாயமண்டலத்தில் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது. நமது பூமியை யார் தாங்குகிறார்கள்? புவிஈர்ப்பு விசை தான் பூமியை நிலையில் வைத்திருக்கிறது என்றும், எல்லாக்கோள்களும், நட்சந்திரங்களும், சந்திரனும், அவைஅவை அவற்றின் நிலையில் இயங்குவதற்கும்  புவிஈர்ப்பு விசை தான் காரணம் என்றும் விஞ்ஞானம் கூறுகிறது.
புவிஈர்ப்பு விசை எனும் இயற்கை விதியை ஏற்படுத்தியவன் சிவபெருமான் தானே! ( அனைத்து விதிகளையும் ஏற்படுத்தியவன் அவனே).
இதையே திருமூலர் அழகாக சிவன் தானே பூமியைத்தாங்குகிறான் என்று பாடுகிறார்.

மேலும் சிவபெருமான் ஆகாயமாய் நின்று அவற்றின் உள் அடங்கும் அனைத்துக்கிரகங்களையும் நட்சத்திரங்களையும் அவற்றின் இடத்தில் நிலையாக வைத்து இயக்குபவனும் அவனே.

மேலும் சிவன் நெருப்பாகவும் அதனுள் இருக்கும் வெப்பமாகவும், சூரியனாகவும் அதனின்று வரும் வெப்பமாகவும், சந்திரனாகவும் அதனின்று வரும் குளிர்ச்சியாகவும் விளங்குகிறான்.
திருமூலர் இக்கருத்தை பாடல் 8இல் ஏற்கனவே “தீயினும் வெய்யன்….” என்று பாடியுள்ளார்.
மணிவாசகர் மேற்கூறிய கருத்துக்களை
“ ….. அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன்;….” என்று திருஅண்டப்பகுதியில்
தெளிவாகப்பாடுகிறார்.

உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கு மழை இன்றியமையாதது. வள்ளுவர் தனது குறளில்
“ வான்நின்று உலகம் வழங்கி வருவதால்
தான்  அமிழ்தம் என்றுணரற் பாற்று.” என்று மழையை அமிர்தம் என்கிறார்.
இத்தகைய சிறப்பு மிக்க மழைபொழிய காரணமான சக்தியாகவும் சிவன் விளங்குகிறான் என்கிறார் திருமூலர்.

வள்ளுவர் ஒரு நாட்டிற்கு எவை எல்லாம் முக்கிய உறுப்புக்கள் என்று தனது குறளில்

“ இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு” என்று கூறி மலைகளின் முக்கியத்தை பதிவு செய்கிறார்.
திருமூலர் இப்பாடலில் அத்தகைய சிறப்பு வாய்ந்த பெரிய மலைகளாகவும் உள்ளான் சிவபெருமான் என்று கூறுகிறார்.

மேலும் நமது பகல்நேர வெப்பத்தை குறைத்து மாலையில் குளிர்ந்த காற்றை அள்ளித்தந்தும், பருவமழைக்கு காரணமாகவும் இருக்கின்ற குளிர்ச்சியான கடலாகவும் விளங்குகிறான் சிவபெருமான் என்கிறார் திருமூலர்.

### சுருக்கம்:

பூமியைத்தாங்கியும், ஆகாயத்தில் நின்றும், வெப்பமாகவும், சூரியனாகவும்,சந்திரனாகவும், மழையாகவும், மலையாகவும், கடலாகவும் எங்கும் வியாபித்திருக்கிறான் சிவபெருமான்.

### சிந்தனைக்கு:

தங்கமானது மூக்குத்தியாக, தோடாக, மோதிரமாக, வளையலாக, மாலையாக என்று பல தோற்றங்களில் வியாபித்திருப்பதுபோல சிவபெருமானே சூரியனாக, சந்திரனாக, வெப்பமாக, குளிர்ச்சியாக, மழையாக , பூமியாக வியாபித்திருக்கிறான். அவனன்றி வேறு எதுவும் இல்லை

## மந்திரம் 11

அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
முயலும் முயலில் முடிவும் மற் றாங்கே
பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே.

### பிரித்து எழுதுதல்:

அயலும் புடையும் எம் ஆதியை நோக்கில்
இயலும் பெரும் தெய்வம் யாதும் ஒன்றில்லை
முயலும் முயலில் முடிவும் மற்றும் ஆங்கே
பெயலும் மழை முகில் பேர் நந்தி தானே.

### பதப்பொருள்:

அயலும் புடையும் — தொலைவிலும் பக்கத்திலும்
எம் ஆதியை — நான் வணங்கும்(திருமூலர் தான் வணங்கும்) பழமையான இறைவன் சிவபெருமானது
பெருமையை

நோக்கில் — நினைத்தால்
இயலும் — அவனுக்கு ஒப்பான, மேன்மைவாய்ந்த , அவனைப்போன்ற
பெரும் தெய்வம் — சிறப்பான தெய்வம்
யாதும் ஒன்றில்லை — வேறு யார் ஒருவரும் இல்லை
முயலும் —. உழவாகிய முயற்சியும்
முயலில் முடிவும் — உழுதலின் பயனும்
மற்றும் ஆங்கே பெயலும் — மேலும் அங்கே பெய்யும் மழையும்
மழை முகில் — மழைக்குக்காரணமான மேகமும்
பேர் நந்தி தானே — அனைத்தும் இறைவன் நந்தி எனும் சிவன் தானே!

## சாரம்:

எம்மைச்சுற்றியும் வெளிஇடங்களிலும் எங்கு நோக்கினும் நான் வணங்கும் பழமையான இறைவன் சிவபெருமானது பெருமையை எண்ணினால், அவனுக்கு ஒப்பான , மேன்மைவாய்ந்த, அவனைப்போல சிறப்பான தெய்வம் வேறு ஒருவரும் இல்லை என்கிறார் திருமூலர்.
மேலும் ஓர் சிறப்பு — உழுதலும் உழுதலின் பயனும், மற்றும் அங்கே பெய்யும் மழையும், மழைக்குக்கரணமான
மேகமும் அவனே என்கிறார் திருமூலர்.

## விளக்கம்:

ஏற்கனவே சிவனுக்கு ஒப்பான தெய்வம் பாரிலும் இல்லை, எங்கு தேடினும் இல்லை, அவனால் வணங்கப்படும் தெய்வம் வேறு யார் நஒருவரும் இல்லை என்றெல்லாம் பாடியுள்ளார திருமூலர்.
இப்பாடலில் அவனது சிறப்பை நோக்கினில் எப்படி ஒப்பிட்டாலும் அவனுக்கு நிகர் யாரும் இல்லை என்கிறார்.
சரி, அப்படி என்ன சிவனது சிறப்புக்கள்?
சிவனது தனிச்சிறப்புக்களையும், பெருமைகளையும் முந்தைய பாடல்களில் பாடுகிறார் திருமூலர்.

1. இறைவன் ஒருவனே, அவன் சிவன் என்றும், எல்லோருக்கும் அவனே தலைவன் எனவும்
2. சக்தியுடன் இணைந்து இருவராக அருள்புரிகிறான் எனவும்
3. மும்மூர்த்திகளை படைத்தவன், அவர்களுக்கு மூத்தவன் எனவும்
4. நான்கு வேதங்களை இயற்றியவன், நான்கு திசைகளுக்கு நாயகன் எனவும்
5. ஐம்புலன்களை வென்றவன், நமது பிறவியை அறுக்க வல்லவன் எனவும்
6. ஏழு உலகங்களையும், அண்டங்களையும் கடந்து நிற்கின்றான் எனவும்
7. கூற்றனை வென்றவன் எனவும்
8. அழிவில்லாதவன் எனவும்
9. அண்டங்கள் அனைத்துக்கும் வித்து எனவும்
10. நமது அறியாமையை நீக்கி ஞானம் அளிப்பவன் எனவும்
11. உயிரினங்கள் வாழ தட்ப வெப்ப நிலையை அருளியவன் எனவும்
12. தாயினும் சிறந்த அன்பானவன் எனவும்
13. பூமியையும், அனைத்துக்கோள்களையும், நட்சத்திரங்களையும் தாங்குபவன், மற்றும் ஆகாயமாய் நிற்பவன் எனவும்
14. அவனே சூரியன், சந்திரன், மழை பொழிகின்ற சக்தி, மலைகள், கடல் என்றெல்லாம் பாடியுள்ளார்

இத்தகைய சிறப்புக்களை உடைய சிவபெருமானுக்கு மேலும் ஓர் சிறப்பு உண்டு.
“முயலும் முயலில் முடிவும் மற்றும் ஆங்கே
பெயலும் மழை முகில்” என்கிறார் திருமூலர்.
முயலும் எனில் முயற்சி எனலாம். கூடவே மற்றாங்கே பெயலும் என்பதால், முயலும் என்பது உழவைக்குறிக்கிறது என்று கருதுகிறேன்.
உழவின் சிறப்பை வள்ளுவர் பலவகையாக போற்றுகிறார்.
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், என்றும்
உழுவார் உலகத்தாருக்கு ஆணி எனவும் பாடுகிறார்
இவ்வளவு சிறந்த உழவும் சிவனே என்றும்
உழவின் பயனும் அவனே எனவும்
பயிர்களுக்கு இன்றியமையாத மழையும் அவனே என்றும்

மழைக்கு காரணமான மேகங்களும் அவனே என்கிறார் திருமூலர்.

சுருக்கம்:

சிவபெருமானது சிறப்புக்களை நோக்கினால் அவனுக்கு நிகரான தெய்வம் யாரும் இல்லை.
உயிர் வாழ தேவையான உணவைப்பொருட்களை தருபவனும் அவற்றுக்கு மூலமான மழையும், மழைக்கு மூலமான மேகங்களும் அவனே.

சிந்தனைக்கு:

இலக்கும் இறைவனே, மார்க்கமும் இறைவனே, பயனமும் இறைவனே. சாத்யவஸ்தும் இறைவனே.(உழுதலின் பலன்). சாதனமும் இறைவனே(ஆன்மீக பயிற்சி). முயற்சியும் இறைவனே. சாதனைக்கு உண்டான தூண்டுகோலும் இறைவனே. இப்படிப்பட்ட இறைவன் மிகமிக அருகே உள்ளான். இறைவனை அறிய முடியாததற்கு காரணம் அவனை நோக்கி நம் கவனம் இல்லாததே. சாதனை மூலமாக சாத்யத்தை அடைய ஆதிஇறைவன் அருள் புரியட்டும்.

## மந்திரம் 12

கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன் என்றுஅறியகி லார்களே.

பிரித்து எழுதுதல்:

கண்ணுதலான் ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறுவார்களும் வானுறுவார்களும்
அண்ணல் இவன் என்று அறியகில்லார்களே.

பதப்பொருள்:

கண்ணுதலான் — நெற்றிக்கண் உடையவன் சிவபெருமான்
ஒரு காதலின் — அன்புடன்
நிற்கவும் — நிலையாக இருக்கவும்
எண்ணிலி — எண்ணற்ற
தேவர் — தேவர்கள்
இறந்தார் எனப்பலர் - இறந்தார்கள் என்று பலர்
மண்ணுறுவார்களும் — இப்பூமியில் வாழ்பவர்களும்

வானுறுவார்களும் — வானுலகத்தில் வாழ்பவர்களும்
அண்ணல் இவன் என்று அறியகில்லார்களே — சிவன்தான் தேவர்கள் அழியாதிருக்க அருள்புரிந்தவன் என்று அறியாது தவறாக இறைவனை நினைக்கின்றனரே!

## சாரம்:

நெற்றிக்கண் உடைய சிவபெருமான் மிகுந்த அன்புடன் நிலையாக இருக்க, அது கண்டு எண்ணற்ற தேவர்கள் அழிவில்லாத அமரர்கள் ஆனார்கள். ஆனால் அவர்கள் இறந்தனர் என்று மண்ணுலகத்திலும் வானுலகத்திலும் உள்ள பலரும் தவறாக புரிந்து கொண்டு, என்றும் கருணை பொழியும் இறைவனை "அழிப்பவன்" என எண்ணுகின்றனரே என திருமூலர் வருந்துகிறார்.

## விளக்கம்:

திருமூலர் தனது பாடல்களில் அவ்வப்போது புராணங்களில் வரும் நிகழ்வுகளை குறிப்பிடுகிறார்.
நுதல் எனில் நெற்றி என்று பொருள். கண்ணுதலான் என்றால் நெற்றிக்கண் உடையவன் என்று பொருள்,
அதாவது சிவபெருமானை குறிப்பிடுகிறது.
கண்ணுதலான் ஆன சிவபெருமான் ஒருமுறை மிகுந்த அன்புடன் நிலையாக இருக்க, அதை கண்ட எண்ணற்ற தேவர்கள், அழிவில்லாத வரம் பெற்று அமரர்கள் ஆகினர். ஆனால் மண்ணுலகத்திலும் வானுலகத்திலும் உள்ள பலரும் தேவர்கள் இறந்துவிட்டனர் என்று அவர்களது அறியாமையின் காரணமாக தவறாக புரிந்து, என்றும் கருணை பொழியும் ஈசனை அழிப்பவன் என்று எண்ணுகிறார்களே என்று திருமூலர் வருந்துகிறார்.
மணிவாசகரும் சிவபுராணத்தில் " கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்து எய்தி" என்று அவனது கருணையை கண்கள் காட்ட என பாடுகிறார்.
மேலும் திருமூலரது பாட்டிலிருந்து நாம் அறிவது, தேவர்களுக்கும் இறப்பு உண்டு, அமரர்கள் இறவா வரம் பெற்று அழிவில்லதவர்கள் ஆக, தேவர்களுக்கும அமரர்களுக்கும சிறு வேறுபாடு உண்டு என அறிவோம்

## சுருக்கம்:

சிவபெருமானது கருணையினால் பல தேவர்கள் அமரர்கள் ஆனார்கள்.

## சிந்தனைக்கு:

**அறியாமையின் குழந்தையாகிய 'நான்' எனும் அகங்காரத்தை இறைவன் தனது கருணையானால் அழித்து மனிதனையும் – தெய்வமாக்கி அழியாத நிலையை தருகிறார். அன்பு, ஞானம், இவைகள் மூலமாக அறியாமையை நீக்கலாம். சிவபெருமான் அன்பின் மூலம் மரணமிலா பெருவாழ்வை தருகிறார். அன்பின் மூலமாக பல தேவர்களுக்கு மரணமிலா பெருவாழ்வை அளித்திருக்கின்றார். உண்மை இவ்வாறு இருக்க, மக்கள் சிவபெருமானை 'அழிக்கும் கடவுள்' என்று அழைக்கிறார்கள்.**

## மந்திரம் **13**

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னும் நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தாந்தன்னை மேலளந் தாரில்லை
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே.

## பிரித்து எழுதுதல்:

மண் அளந்தான் மலரோன் முதல் தேவர்கள்
எண் அளந்து இன்னும் நினைக்கிலார் ஈசனை
விண் அளந்தான் தன்னை மேல் அளந்தார் இல்லை
கண் அளந்து எங்கும் கடந்து நின்றானை!

## பதப்பொருள்:

மண் அளந்தான் — ஓர் அடியில் உலகத்தை அளந்த திருமால்
மலரோன் முதல் — திருமாலது உந்திக்கமலத்திலிருந்து உதித்த பிரமன் முதல்
தேவர்கள் — தேவர்கள் வரை
எண் அளந்து — எண்ணத்தினால் கூட ஈசனின் பெருமைகளை சிந்தித்து
இன்னும் —- இதுநாள் வரை

நினைக்கிலார் —- நினைக்காமல் இருக்கின்றனர்
விண் அளந்தான் தன்னை — விண்ணுலகை அளந்த ஈசன் தன்னை
மேல் அளந்தார் இல்லை —- அளந்தவர் எவரும் இல்லை.
கண் அளந்து எங்கும் —- கண்டங்கள் அனைத்தையும் முழுவதும் (எங்கும், எதையும், எதிலும்) அளந்து
கடந்து நின்றானை! —- அதற்கு மேலும் கடந்து நிற்கின்றானே!

## சாரம்:

ஓர் அடியில் உலகத்தை அளந்த திருமால், திருமாலது உந்திக்கமலத்திலிருந்து உதித்த பிரமன் முதல்
தேவர்கள் வரை எவரும் எண்ணத்தினால் கூட ஈசனின் பெருமைகளை சிந்தித்து இதுநாள் வரை
நினைக்காமல் இருக்கின்றனர். விண்ணுலகை அளந்த ஈசன் தன்னை அளந்தவர் எவரும் இல்லை.
அவன் கண்டங்கள் அனைத்தையும் முழுவதும் (எங்கும், எதையும், எதிலும்) அளந்து அதற்கு மேலும் கடந்து நிற்கின்றானே!

## விளக்கம்:

மண்ணளந்தான், அதாவது உலகத்தை அளந்தான் என்று திருமாலைக்குறிப்பிடுகிறார் திருமூலர்.
இக்கருத்தை “ ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி” என்று ஆண்டாள் திருப்பாவையிலும்
“ மண்ணும் விண்ணும் தாய அடி அளந்தான்” என்று ஞானசம்பந்தர் தேவரத்திலும் குறிப்பிடுகின்றனர்.
திருமால், பிரமன் மற்றும் அனைத்து தேவர்களும் ஈசனின் பெருமைகளை நினைக்கவில்லையே என்று
வருந்துகிறார் திருமூலர்.
இந்த கருத்துபோல் தனது பாடல் 3 இல் “ பக்க நின்றார் அறியாத பரமனை” என்றும் பாடல் 8இல் “ தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன், ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை”
என்றும் பாடுகிறார் திருமூலர்.

தேவர்கள் எண்ணத்தில் கூட ஈசனை சிந்தித்து நினைக்கவில்லை என்று திருமூலர் கூறுவது போல
“ எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி” என்று ஈசனை போற்றுகிறார் மாணிக்கவாசகர் சிவபுராணத்தில்.
மேலும் மணிவாசகர் சிவபுராணத்தில் சிவனது பரிமாணங்களைப்பற்றி வர்ணிக்கையில்
“ விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்” என்றும்
“ எல்லை இலாதானே” என்றும்
“ ஆக்கம் அளவு இறுதி இல்லாய்” என்றும் போற்றுகிறார்.
அப்படியென்றால் அளவிடக்கூடிய அனைத்தும் அளவிடமுடியாத ஒன்றில்தானே அடங்கும்.
அதாவது அளவிடமுடியாத ஈசனை எவராலும் அளக்கமுடியாது.
இக்கருத்தைதான் திருமூலர் பாட்டின் மூன்றாவது வரியில்” விண் அளந்தான் தன்னை மேல் அளந்தார் இல்லை” என்று பாடுகிறார்

அவன் கண்டங்கள் அனைத்தையும் முழுவதும் (எங்கும், எதையும், எதிலும்) தன் கண்களால் அளந்து அதற்கு மேலும் கடந்து நிற்கின்றானே! என்கிறார் திருமூலர் 4வது வரியில்.
இது ஈசனின் எட்டு குணங்களில் ஒன்றான அனைத்தையும் தன் வசப்படுத்தும் தன்மையை வெளிப்படுத்துகிறது. அவன் ஒருவனே முழுமையானவன் - பிற அனைத்தும் அவனின் பகுதிகள்.

### சுருக்கம்:

அளவில்லாத ஈசனை வணங்குவோம்.

### சிந்தனைக்கு:

நாராயணனின் உந்திக் கமலத்தில் உதித்த பிரமனை புத்தியோடு ஒப்பிட்டுப் பாடுகின்றார்கள். தேவர்களையோ புலன்களோடு ஒப்பிடுகின்றார்கள். பிரமன் முதலான தேவர்கள் இறைவனை அறியமாட்டார்கள். புத்தி முதற்கொண்டு இந்திரியங்கள் அனைத்தும் இறைவனை அறியமுடியாது. ஏனெனில், அண்டங்கள் அனைத்தையும் கடந்த ஒருவனை துன்பத்தில் உள்ளவைகளால் எவ்வாறு அறியமுடியும்? ஐந்துபடி பாலை ஒரு படி பாத்திரத்தில் எவ்வாறு அடக்க முடியும்?

## மந்திரம் 14

கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணம்எம் மாயன்
கடந்துநின் றான்அவர்க்கு அப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே.

### பிரித்து எழுதுதல்:

கடந்து நின்றான் கமலம் மலர் ஆதி
கடந்து நின்றான் கடல் வண்ணம் எம்மாயன்
கடந்து நின்றான் அவர்க்கு அப்புறம் ஈசன்
கடந்து நின்றான் எங்கும் கண்டு நின்றானே.

### பதப்பொருள்:

கமலம் மலராதி - பிரம உலகமாகிய வியாழ அண்டத்தையும்;
கடல்வண்ணன் எம்மான் - விண்டு உலகமாகிய செவ்வாய் அண்டத்தையும்;
அவர்க்கப்புறம் ஈசன் - அதற்குமேல் இருக்கப்பட்ட உருத்திரன் உலகமாகிய சுக்கிர அண்டத்தையும்; மகேசன் உலகமாகிய புதன் அண்டத்தையும்; எங்குங் கண்டு நின்றான் - எல்லாவற்றையும் கடந்து நின்றாலும் எல்லாவற்றிலும் நிறைந்து நிற்கின்றான்.

சாரம்:

சிவவெருமான் மண்ணுலகைத் கடந்து நிற்கின்ற மலரோனாகிய ஆதியையும் கடந்து நின்றனன். அதுபோல் கடல் வண்ணனாகிய மாயனையும் கடந்து நின்றான். ஈசனாகிய அரனையும் கடந்து நின்றான். எல்லாவற்றையும் கடந்தும் நோக்கி நின்றருள்கின்றனன் அருளால்.

சிந்தனைக்கு:

நெருப்பில் இடப்பட்ட இரும்பு குண்டு நெருப்பின் தன்மையை தனக்குள் முழுவதும் உள்வாங்கி, தன்னைக் கடந்தும் நெருப்பின் தன்மையை தாங்கிக் கொண்டு இருப்பது போல, எங்கும் நிறைந்து இருக்கின்ற இறைவன் -- அண்டங்கள் அனைத்திற்க்குள்ளும் ஊடுருவியும், கடந்தும் அனைத்தையும் அறிந்து நிற்கின்றான்.

## மந்திரம் 15

ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந்துஆர்ந்துஇருந் தான்அருள்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே.

பிரித்து எழுதுதல்:

ஆதியுமாய் அரனாய் உடலுள் நின்ற
வேதியுமாய் விரிந்து ஆர்ந்து இருந்தான் அருள்
சோதியுமாய் சுருங்காததோர் தன்மையுள்
நீதியுமாய் நித்தமாகி நின்றானே.

பதப்பொருள்:

ஆதியுமாய். — பழமையாய்
அரன் — சிவன்
வேதியுமாய் — அனைத்தும் அறிந்தவன்
விரிந்து ஆர்ந்து — அகலமாகவும் , ஆழமாகவும் பரவி
அருட்சோதி — கருணை ஒளி, தயவு
சுருங்காத்தோர் — அளவிலும் தரத்திலும் குன்றாத, குறையாத
நித்தமாய். — என்றும் அழியாத நிலை, தொடர்ந்து

## சாரம்:

சிவன் பழமையானவன், எல்லாம் அறிந்தவன்,எங்கும் எதிலும் பரவி இருப்பவன். நம் உடலுக்கு உள்ளும் இருப்பவன். தனது வற்றாத குறைவில்லாத மாபெரும் கருணை
வெள்ளத்தை அனைத்து உயிர்களுக்கும் வழங்குகிறான்.
அத்துடன் அழிவில்லாத சிவன் எல்லோருக்கும் தொடர்ந்து அவரவர் செயலுக்கு ஏற்ப நீதியும்
வழங்குகிறான்.

## விளக்கம்:

ஆதியுமாய் என்பதற்கு ஆரம்பம், முதல் அல்லது பழமை என்று பொருள். இங்கு பழமை என்றுதான் பொருள். காரணம் சிவனுக்கு ஆரம்பம் ஏது?
திருவாசகத்தில் மணிவாசகர் ' ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே' என்று சிவபுராணத்தில் சிவனை குறிப்பிடுகிறார். இது சிவன் பழமையானவன் என்பதை உறுதிப்படுத்துகிறது.
திருமூலர், சிவன் நமது உடலில் நின்று அருள் புரிகிறார் என்கிறார்.
மணிவாசகரும் திருவாசகம் கோவில்திருப்பதிகத்தில. " இறைவனே: நீ என் உடல் இடம் கொண்டாய், இனி நான் உன்னை என் இரக்கேனே" என்கிறார். இருவரும் ஒன்றையே கூறுகின்றனர்.
மேலும் திருமூலர், சிவனை விரிந்து ஆர்ந்து இருந்தான் என்கிறார்.
அதாவது சிவன் ஆழமாகவும் அகலமாகவும் படர்ந்து விரிந்து அளவில்லாதவனாய் இருக்கிறான் என்று பொருள். சிவபுராணத்தில் மணிவாசகர் " ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்று அதையே சொல்கிறார்.
சிவன் தனது மாபெரும் கருணை வெள்ளத்தை ஆறுபோல அள்ளிஅள்ளி, தரத்திலும் அளவிலும் குன்றாமல், சுருங்காமல், உயிர்களுக்கு வழங்குகிறார் என்கிறார் திருமூலர்.
இதையே மணிவாசகர் " மாசற்ற சோதி" என்றும் " பேராது நின்ற பெருங்கருணைபேராறே" என்றும் வர்ணிக்கிறார்
சிவன் நமது உடலில் இருந்தே தனது கருணையை நமது செயல்களுக்கு ஏற்ப நீதியை என்றும் எப்பொழுதும் வழங்குகிறான் என்று கூறி பாடலை முடிக்கிறார் மூலர்.

## சுருக்கம்:

எங்கும் நிறைந்து எதிலும் பரவி, நமது உடலுக்குள்ளும் நீங்காது இருந்து, ஈசன் நமது செயல்களுக்கு ஏற்றவாறு நீதியும் வழங்குகிறான்.

## சிந்தனைக்கு:

நம்மிலும் விழிப்புநிலை, கனவுநிலை, உறக்கநிலை என்ற மூன்று அவஸ்தைகளிலும் ஊடும் பாவுமாக ஊடுருவியும் கடந்தும் நின்று நம்மை முற்றிலும் அறிந்து நிற்கின்றான்

## மந்திரம்  16

கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரரும் தேவரும்
கோது குலாவிக் குணம்பயில் வாரே.

### பிரித்து எழுதுதல்:

கோது குலாவிய கொன்றை  குழல் சடை
மாது  குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரரும்  தேவரும்
கோது குலாவி குணம் பயில்வாரே!

### பதப்பொருள்:

கோது — பூவின் நரம்பு போன்ற காம்பு
குலாவிய — விளங்குதல், நிலைபெறுதல்
கொன்றை — கொன்றை மலர்
குழல் சடை — சுருள் சுருளாக அமைந்த நீண்ட சடை
மாது — உமாதேவி
குலாவிய — மகிழ்ந்த
வாள்நுதல் — ஒளி பொருந்திய நெற்றி
பாகனை — சிவபெருமானை
யாது குலாவி — என்னவென்று உறவாடுவர்
அமரரும்  —- அமரர்களும்
தேவரும். — தேவர்களும்
கோது — குற்றத்திலே

குலாவி — சஞ்சரிக்கும்
குணம்  — பண்பை
பயில்வாரே —- வழக்கமாக கொண்டவர்கள்.

## சாரம்:

நரம்புகள் போன்ற காம்புகளைக்கொண்ட அழகிய சரம்போன்ற கொன்றைப்பூக்களை தனது குழல் போன்ற நீண்ட சடையில் அனிந்தவனும், தனது இடபாகத்தை ஒளிபொருந்திய
நெற்றியை உடைய நல்ல மாது எனப்படும் உத்தமி உமாதேவிக்கு தந்து மகிழ்ந்தவனும் ஆகிய
சிவபெருமானை, குற்றத்திலேயே சஞ்சரிக்கும் பண்புகளை வழக்கமாக கொண்ட அமரர்களும்,
தேவர்களும் என்னவென்று உறவாடுவார்கள்? உறவாடமாட்டார்கள்.

## விளக்கம்:

இப்பாடலில் கோது என்ற சொல்லை முதல் மற்றும் கடைசி வரிகளில் பயன்படுத்துகிறார் திருமூலர்.
கோது என்பதற்கு சாறு பிழிந்த சக்கை, பழங்களின் தோல், பூக்களின் நரம்பு, குற்றம், நெறிதவறுதல், போன்று பல அர்த்தங்கள் உண்டு.
முதல் வரியில் கொன்றைப்பூ பற்றி வருவதால், கோது என்பதற்கு அதன் நரம்பு போன்ற காம்பு எனப்பொருள்
கொள்ளலாம்.
அதுபோலவே குலாவி என்ற சொல் நான்கு வரிகளிலும் வருகிறது. குலாவுதல் என்பதற்கு உலாவுதல்,
சஞ்சரித்தல், நடமாடுதல், விளங்குதல், மகிழ்தல், நிலைபெறுதல், உரவாடுதல், கொண்டாடுதல் போன்று பல
அர்த்தங்கள் உண்டு. முதல் வரிக்கு ‘விளங்கிய’ என்ற பொருள் பொருத்தமாக இருக்கிறது.

இப்போது முதல் வரியின் முழு அர்த்தத்தைப்பார்ப்போம்.
நரம்புகள் போன்ற காம்புகளுடன் விளங்கும் அழகிய சரம்போன்ற கொன்றைப்பூக்களை
தனது குழல் போன்ற நீண்ட சடையில் அனிந்த சிவபெருமான் என அர்த்தமாகிறது.
சிவனது சடை தனிச்சிறப்பு வாய்ந்தது. அதைப்பற்றி முந்தைய சில பாடல்களில் திருமூலர் வர்ணிக்கிறார்.
இப்பாட்டில் மேலும் அது குழல் போன்று சுருளாக நீண்டு இருக்கிறது என்கிறார் திருமூலர்.
இப்போது கொன்றை மலர்களைப்பற்றி சிந்திப்போம்.
இம்மலர் சிவனுக்கு பிடித்த மலர்களில் ஒன்று. சிவ பூசைக்கு உகந்தது. இதற்கு நீள்சடையோன், சரக்கோன்றை போன்ற பெயர்களும் உண்டு. இது மரத்தினில் பூக்கும். சரம் சரமாக பூத்துக்குலுங்கும்.
மார்ச், ஏப்ரல் மாதங்களில் பூக்கும். பொன்னிற, மஞ்சள் நிறம். காண்பதற்கு கொள்ளை அழகு.
பல சிவன் கோவில்களில் தலவிருட்சமாக உள்ளது. நரம்பு போன்ற காம்பில் கொத்து கொத்தாக தொங்கும்.
பூக்கள் பிரணவ வடிவில்( ஓம் வடிவில்) இருப்பது இன்னொறு விசேடம்.
இவற்றை மாலையாக கட்ட வேண்டிய அவசியம் இல்லை. அப்படியே சிவலிங்கத்துக்கு சாத்தலாம்.

அதுவே சரம் சரமாக இருக்கும்.
இதில் என்ன ஆச்சர்யம் என்றால் இப்பூவை சிவன் கோவில்களில் வழிபாட்டுக்கு பயன்படுத்தும் வழக்கம்
தமிழ் நாட்டில் இல்லை. ஏன் என்று தெரியவில்லை. இது இரண்டு மாதங்களில தான் கிடைக்கும்.
இருந்தால் என்ன? நாம் ஏன் இந்த மலரை பயன்படுத்த விழிப்புணர்வு செய்யக்கூடாது?[இது ஒருவரின் சொந்த விருப்பம்]
( நவக்கிரக கோவில்கள் சமீபகாலங்களில் பிரசித்திபெற்றுவிட்டன, பிரதோஷ வழிபாடு பிரசித்தி
பெற்றுவிட்டது, பின்பு ஏன் சிவனுக்கு பிடித்த கொன்றை மலர் வழக்கத்துக்கு வரக்கூடாது?).
இப்பூவினது சிறப்பை பல அருளாளர்கள் பாடியுள்ளனர்.
சுந்திரமூர்த்தி நாயனார் தனது பொன்னார் மேனியனே என்ற மிகவும் புகழ் பெற்ற பாட்டில்
" .... மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே.." என்று பாடுகிறார்.
மணிவாசகர் திருவெம்பாவையில் காதார் குழைஆட.... என்னும் பாடலில்
"... வேதப்பொருள் பாடி அப்பொருள் ஆமா பாடிச்
சோதித்திறம் பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி...." என்று பாடுகிறார்.
ஔவையார் சிவபெருமான் மீது கொண்ட பத்தியால் ஆத்திச்சூடி போல நீண்ட சொற்றொடரால்
ஆன தனது நூலுக்கு கொன்றை வேந்தன் என்று பெயர் சூட்டியுள்ளார்.

இரண்டாவது வரி உமாதேவியைப்பற்றி வர்ணிப்பதால் இங்கு குலாவி என்பதற்கு மகிழ்ந்த எனும்
பொருள் பொருத்தமாக இருக்கும். மேலும் தேவியை வாள்நுதல் என்று வர்ணிக்கிறார். அதாவது
ஒளிபொருந்திய நெற்றியை உடைய தேவி என்று பொருளாகிறது.
இந்த வரியின் முழுப்பொருள் - தனது இடபாகத்தை ஒளிபொருந்திய
நெற்றியை உடைய நல்ல மாது எனப்படும் உத்தமி உமாதேவிக்கு தந்து மகிழ்ந்த சிவன் என்று பொருளாகிறது.

## சுருக்கம்:

குற்றத்திலே பொருந்தி இருப்பவர்கள் சிவனை அடையமுடியாது.

## சிந்தனைக்கு:

ஓங்கார வடிவில் அமைந்த கொன்றை மலரை தானும் சூடி, உமாதேவிக்கும் சூடிவிட்டு, அழகு பார்க்கின்ற ஆனந்தம் நம் சிவபெருமானுக்கே உரித்தானது. 'ஓம்'காரத்தை சாதனமாகக் கொண்டு சிவனை அடைபவர்கள் பலர். உள்ளத்தில் குற்றம் குறை உள்ளவர்களால் ஓம்கார தியானம் செய்யமுடியாது. சிவனையும் அடைய முடியாது.

மனத் தூய்மை உள்ளவர்களால் மட்டுமே ஓம்கார தியானத்தின் மூலம் சிவனை அடைய முடியும்.

## மந்திரம் 17

காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினும்
மாயங் கத்தூரி யதுமிகும் அவ்வழி
தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே.

### பிரித்து எழுதுதல்:

காயம் இரண்டும் கலந்து கொதிக்கினும்
மாயம் கத்தூரி அதுமிகும் அவ்வழி
தேசம் கலந்து ஒரு தேவன் என்று எண்ணிணும்
ஈசன் உறவுக்கு எதிர் இல்லை தானே!

### பதப்பொருள்:

காயம் இரண்டும் —- பூண்டும், பெருங்காயமும்
கலந்து கொதிக்கினும் — இவற்றை கலந்து கொதிக்க வைத்தாலும்
மாயம் கத்தூரி — மயக்கும் கஸ்தூரி
அதுமிகும் — அதன் வாசம் மிகுதியாகும்
அவ்வழி —- அதுபோலவே
தேசம் கலந்து — பல தேசங்களில் உள்ள கடவுள்களை ஒப்பிட்டு
ஒரு தேவன் என்று எண்ணிணும் —- அதில் ஒரு கடவுளை மட்டும் அனைவருக்கும் முதல்வன் என்று கருத முற்பட்டால்
ஈசன் உறவுக்கு எதிர் இல்லை தானே!—— ஈசனுக்கு முன்பு யாரையும் ஒப்பிட முடியாது.

### சாரம்:

பூண்டும், பெருங்காயமும் ஆகிய இவற்றை கலந்து கொதிக்க வைத்தாலும் இன்ப மயக்கும் தரும் கஸ்தூரியின் வாசத்திற்கு ஈடாகாது.

அதுபோலவே பல தேசங்களில் உள்ள கடவுள்களை ஒப்பிட்டு அதில் ஒரு கடவுளை மட்டும் அனைவருக்கும் முதல்வன் என்று கருத முற்பட்டால் ஈசனுக்கு முன்பு யாரையும் ஒப்பிட முடியாது.

## விளக்கம்:

காயம் என்ற சொல்லுக்கு உடல், புண், பூண்டு, பெருங்காயம் போன்று பல அர்த்தங்கள் உண்டு.
இரண்டாவது வரியில் கஸ்தூரி எனும் நறுமணம் வீசும் பொருளுடன் காயத்தை ஒப்பிடுகிறார்.
ஆக காயம் என்பதற்கு பூண்டும் பெருங்காயமும் பொருத்தமாக இருக்கிறது.
பூண்டையும் பெருங்காயத்தையும் சேர்த்து சமையல் செய்தால் நன்கு மணம் வீசும்.
இருந்தாலும் கஸ்தூரியின் இன்ப மயக்கம் தரும் நறுமணத்திற்கு ஈடாகாது.

உலகத்தில் பல்வேறு சமூகத்தினர் தங்களது நம்பிக்கைகளுக்கு ஏற்ப வெவ்வேறு தெய்வங்களை வழிபடுகின்றனர். சிலர் சூரியனை வழிபடுகின்றனர். சிலர் இயற்கையை
வழிபடுகின்றனர். இருப்பினும் இந்த தெய்வங்களுக்கு எல்லாம் குற்றம் இருக்கிறது. பிறப்பு இறப்பு
உண்டு. அளவிருக்கிறது. எல்லையிருக்கிறது.
இவர்களை எல்லாம் ஆராய்ந்தால் ஈசனது எண்குணங்களுக்கு அருகில் நெருங்கக்கூட இயலாது.
ஈசன் ஒப்பில்லாதவன். ஆதியும் அந்தமும் இல்லாதவன். புவனங்கள் அனைத்தும் கடந்து ஒளி வீசுபவன்.
எங்கும் வியாபித்து இருப்பவன். அளவில்லாதவன். எல்லையற்றவன். கருணையே வடிவானவன்.
எவ்வாறு பூண்டும் பெருங்காயமும் கஸ்தூரிக்கு ஈடாகாதோ, பிற தெய்வங்கள் ஈசனுக்கு ஈடாகாது.

## சுருக்கம்:

உலகத்தில் உள்ள பல சமூகத்தினர் வேறு வேறு தெய்வங்களை வழிபட்டாலும் எந்த தெய்வமும் ஈசனுக்கு ஈடாகாது.

## சிந்தனைக்கு:

**இந்த மந்திரத்தில் மூலர் – சிவனுக்கு ஒப்பான தெய்வம் எவரும் இல்லை என்று கூறுவது, பிற தெய்வங்களை தாழ்த்தி பேசுவதற்காக அல்ல. தன் இஷ்ட தெய்வத்தை புகழ்ந்து பேசுவதற்காக மட்டுமே. ஏனெனில் இதே திருமூலர் சிவனன்றி வேறு தெய்வம் பாரினில் இல்லை என்று கூறினார். பக்தன் தன் இஷ்ட தெய்வத்தின் மீது ஆழமான பக்தியை செலுத்த வேண்டும் என்பதற்காக இவ்வாறு கூறுகின்றார்.**

## மந்திரம் **18**

அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
அதுபதி ஆதரித்து ஆக்கமது ஆக்கின்
இதுபதி கொள்என்ற எம்பெரு மானே.

### பிரித்து எழுதுதல்:

அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறை தவம் நோக்கி
அதுபதி ஆதரித்து ஆக்கம் அது ஆக்கின்
இதுபதி கொள் என்ற எம் பெருமானே.

### பதப்பொருள்:

அதிபதி - தலைவன்
அளகை வேந்தனை - கைலையில் இருக்கும் அளகாபுரி நகரை ஆண்ட அரசனான குபேரன்
நிதிபதி - செல்வத்திற்கு தலைவன்
அதுபதி ஆதரித்து - சிவபெருமானை நோக்கிச் செய்த
இதுபதி கொள் - வட திசைக்குத் தலைவன் ஆவாய் என்று சொன்ன
எம்பெருமானே - என் சிவபெருமானே

**விளக்கம்**:

அளகாபுரி வேந்தனான குபேரன் வட திசைக்குத் தலைவனாகவும், செல்வத்திற்கு அதிபதியாகவும் காரணம் , அவன் சிவபெருமானை நோக்கிச் செய்த நிறைந்த தவம். அந்த தவத்தை நாமும் வடதிசை நோக்கி செய்வோம். அப்படி

செய்வோரை குபேரன் போல் நீயும் தலைவன் ஆவாய் என்று சொன்ன என் சிவபெருமானை வணங்குகிறேன்.

### சிந்தனைக்கு:

குபேரன் செல்வத்தின் அதிபதி. இரண்டுவித செல்வங்கள் உண்டு. ஒன்று புறச் செல்வம். இரண்டாவது அகச் செல்வம். தவத்தின் மூலமாக, நம்மை இருக்கும் இடத்திலிருந்து உயர்த்திக் கொள்ளலாம். புறச் செல்வம் மாறக் கூடியது. அகச் செல்வம் மாறாதது. தவத்தின் மூலமாய் அகச் செல்வத்தை வளர்த்து, நீயும் ‘தலைவனாகலாம்’ எனச் சொல்லும் சிவபெருமானை வணங்குவோம்.

## மந்திரம் **19**

இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே.

### பிரித்து எழுதுதல்:

இதுபதி ஏலம்  கமழ் பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறிவாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதியாக அமருகின்றானே!

### பதப்பொருள்:

இதுபதி —- இந்த உலகில்
ஏலம்  —- நறுமணம் வீசும் ஏலக்காய் தோட்டங்கள் இருப்பது போல
கமழ் —- நறுமணம் வீசும்
 பொழில் —- எப்பொழுதும் வறட்சியின்றி மழைகள் நிறைந்த சோலைகள்
 ஏழும் — ஏழு உலகங்களிலும் தோற்றுவித்தவன் இறைவன்.
முதுபதி —- அதேசமயம் அண்டங்கள் அனைத்தும் ஒடுக்கப்படும் ஊழிக்காலத்தில்
செய்தவன் —- இச்சோலைகளை அழிப்பவனும்
மூதறிவாளன் —- பேரறிவு படைத்த அனைத்தைவும் தன்வசப்படுத்தும் இறைவன் சிவபெருமானே.
விதுபதி நோக்கி — சந்திரனை தன் தலைமேல் அனிந்த அச்சிவபெருமானை நினைத்து
மெய்த்தவம் செய்தவன் — உண்மையான அன்புடன் தவம் செய்கின்ற அடியார்கள்
அதுபதியாக —- அவர்களது இதயத்தை இடமாகக்கொண்டு
அமருகின்றானே! —- ஈசன் அமர்ந்து அவர்களுக்கு எப்போதும் அருள் புரிகின்றானே!

### சாரம்:

இந்த உலகில் நறுமணம் வீசும் ஏலக்காய் தோட்டங்கள் இருப்பது போல நறுமணம் வீசும் எப்பொழுதும் வறட்சியின்றி மழைகள் நிறைந்த சோலைகள் ஏழு உலகங்களிலும் தோற்றுவித்தவன் இறைவன்.
அதேசமயம் அண்டங்கள் அனைத்தும் ஒடுக்கப்படும் ஊழிக்காலத்தில் இச்சோலைகளை அழிப்பவனும் பேரறிவு படைத்த அனைத்தைவும் தன்வசப்படுத்தும் இறைவன் சிவபெருமானே.
சந்திரனை தன் தலைமேல் அனிந்த அச்சிவபெருமானை நினைத்து உண்மையான அன்புடன் தவம் செய்கின்ற அடியார்கள் அவர்களது இதயத்தை இடமாகக்கொண்டு ஈசன் அமர்ந்து அவர்களுக்கு எப்போதும் அருள் புரிகின்றானே!

## விளக்கம்:

இப்பாடலில் பதி என்ற சொல்லை நான்கு வரிகளில் பயன்படுத்துகிறார் திருமூலர்.
முதல் இரு வரிகளில் உலகம் மற்றும் அண்டங்கள் என்னும் பொருளையும், மூன்றாவது வரியில் இறைவனையும், நான்காவது வரியில் இடத்தையும் குறிக்கிறது இச்சொல்.
இப்பாடலில் ஏலக்காய் என்ற வாசனை மிகுந்த பயிரைப்பற்றி பாடுகிறார். இதுவும் ஓர் இடத்தின்
பொருளாதாரத்தை மேன்படுத்தும் தாவரம், பல மருத்துவ குணங்களைக்கொண்டது, மனிதனுக்குப்பயன்படும் பயிர்.
அடுத்து இப்பாடலில் ஏழு உலகங்களிலும் வளம்மிக்க வறட்சியின்றி மழைகள் நிறைந்த சோலைகள்
இருப்பதாகப்பாடுகிறார் திருமூலர். இதிலிருந்து நாம் அறிவது, நமது பூமிமட்டும் இல்லாமல்
மற்ற ஆறு உலகங்களில் நீர் வளம் உள்ளது, அப்படியென்றால் உயிரினங்கள் அவசியம்
இருக்கவேண்டும் என்று அறியலாம்.
மேலும் ஊழிக்காலத்தில் அனைத்து அண்டங்களையும் தன்னுள் அடக்கும் ஆற்றல் மிக்க இறைவன்
அன்புள்ளம் கொண்ட அடியார்களது இதயத்தில் குடியிருக்கிறான் என்ற செய்தியையும்
கூறுகிறார் திருமூலர்.

## சுருக்கம்:

அண்டங்கள் அனைத்தும் ஊழிக்காலத்தில் இறைவனால் ஒடுக்கப்படும்.
அத்தகைய ஆற்றல் படைத்த இறைவன் அடியார்களது இதயத்தில் குடியிருக்கிறான்.

## சிந்தனைக்கு:

**பக்தர்களுக்கு நறுமணம் தரக்கூடிய நற்பண்புகள் அவசியம். அவை மென்மேலும் வளரக் கூடியது என்றாலும், பக்தர்களின் இதயத்தில் இறைவன் வெளிப்பட்டு அருள் பாலிக்க வேண்டும் என்றால், நற்பண்புகள் மீதுள்ள 'நான்' எனும் பற்று நீங்க வேண்டும். அதை அழிப்பவன் இறைவனே. ஏனெனில் நல்லது – கெட்டது எனும் பேத பாவனை நீங்க வேண்டும். அப்பொழுது மட்டுமே இறைவன் பக்தர்களுக்கு வெளிப்படுவான்.**

## மந்திரம் 20

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறனெறி* நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவம்
கடிமலர்க் குன்ற மலையது தானே.

### பிரித்து எழுதுதல்:

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறநெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசன் உருவம்
கடிமலர் குன்றம் மலை அது தானே!

### பதப்பொருள்:

முடிவும் — நமது பிறவி முடிவடையும் அதாவது நாம் இறக்கும் நாளையும்
பிறப்பையும் — நாம் பிறக்கும் நாளையும்
முன்னே படைத்த — நாம் பிறவி எடுக்கும் முன்பே வகுத்த
அடிகள் —- ஈசன்
உறையும் —- இருக்கும் இருப்பிடம்
கடிமலர் —- பிரகாசமான கண்களுக்கு
குன்றம் மலை அது தானே! — மத்தியில் புருவத்தின் மேல் அமைந்த சிரசில் தானே!
அறநெறி நாடில் —- ஈசன் வகுத்த அறநெறியில் வாழ்ந்து அவனை நாடினால்
இடியும் —- இடி இடிக்கும் போது ஏற்படும் மின்னல் ஆகிய ஒளியும்
முழக்கமும் — அதன்பின் வரும் முழக்கம் இடியோசை ஆகிய ஒலியும்
ஈசன் உருவம் —- ஈசனது உருவமே என்று அறிவோம்.

### சாரம்:

நமது பிறவி முடிவடையும் அதாவது இறக்கும் நாளையும், நாம் பிறக்கும் நாளையும், நாம் பிறவி எடுக்கும் முன்பே வகுத்த ஈசன், இருக்கும் இருப்பிடம், பிரகாசமான கண்களுக்கு மத்தியில் புருவத்தின் மேல் அமைந்த சிரசில் தான்.
ஈசன் வகுத்த அறநெறியில் வாழ்ந்து அவனை நாடினால், இடி இடிக்கும் போது ஏற்படும் மின்னல் ஆகிய ஒளியும் அதன்பின் வரும் முழக்கம் இடியோசை ஆகிய ஒலியும் ஈசனது உருவமே என்று அறிவோம்.

### விளக்கம்:

சிவன் நாம் இப்பிறவி எடுக்கப்போகும் நாளையும், இறக்கப்போகும் நாளையும், நாம் பிறவி எடுக்கும்
முன்பே வகுக்கிறான். நாம் முன் பிறவியில் வாழ்ந்த வினைகளுக்கு ஏற்ப அவ்வினைப்பயனை அனுபவிக்க
இப்பிறவி வாழ்நாளைக்கணக்கிடுகிறான் ஈசன். இந்த மிகப்பெரிய உண்மையை இப்பாடல் மூலம்
தெரிவிக்கிறார் திருமூலர்.
இதிலிருந்து பிறப்பவர்கள் அனைவரும் இறப்பது உறுதி என்றும், மேலும் நமது வாழ்நாளை நிர்ணயிப்பது ஈசனே என்றும் அறிகிறோம்.
ஏற்கனவே பாடல் 15இல் சிவன் நமது உடலுள் நின்று நித்தம் நீதி வழங்குகிறான் என்று பாடியவர்,
இப்பாடலில் ஈசன் நமது புருவமத்தியின் மேலுள்ள சிரசில் உறைகிறார் என்று பாடுகிறார் திருமூலர்.
மற்றும் பாடல் 10இல் சிவன்தான் அக்னி, அவன்தான் சூரியன், சந்திரன், மழை, சக்தி, மலைகள், கடல்கள்
என்றெல்லாம் பாடியவர், இப்பாடலில் அவன்தான் ஒளியும் ஒலியும் என்கிறார்.
அதுவும் தேவர்களும் அறியமுடியாத சிவனை, நாம் இப்பிறவியில் அவன் வகுத்த அறநெறியில்
வாழ்ந்தால் மின்னல் ஒளியும் இடியோசையும் அவனது உருவமே என்று அறிந்து அவனை உணரலாம் என்ற
மிக உயர்ந்த உண்மையை நமக்குத்தெரிவிக்கிறார் திருமூலர்.
இதிலிருந்து இப்பிறவியில் ஈசன் தன்னை அறிய நமக்கு அரிய ஒரு வாய்ப்பளித்திருக்கிறான் என்ற
உண்மையும் அறியலாம்.
அதன்படி நடப்போமா?

## சுருக்கம்:

நமது இப்பிறவியின் வாழ்நாளை நிர்ணயம் செய்வது ஈசனே.
இவ்வாழ்நாளில் அறநெறியில் வாழ்ந்தால் அவனைக்காணலாம்.

## சிந்தனைக்கு:

வாழும் காலத்தை கணக்கிட்டு இறைவன் நம்மை உலகத்தில் படைக்கின்றான். நம்மை படைத்த இறைவன் நமது சகஸ்ராரத்தில் குடி கொள்கின்றான். தருமத்தின்படி வாழ்கின்ற மனிதர்கள் இறைவனை உணர்ந்த பிறகு, இடியும், மின்னலும், இடி ஓசையும் (நன்றும், தீதும், சுகமும், துக்கமும், மானமும், அவமானும், இறைவனே என்பதை ஏற்றுக் கொண்டவர்கள்) அவனே என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள்.

## மந்திரம் 21

வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தளங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே!

### பிரித்து எழுதுதல்:

வானப்பெரும் கொண்டல் மால் அயன் வானவர்
ஊனப்பிறவி ஒழிக்கும் ஒருவனை
கானக்களிறு கதற பிளந்த என்
கோனை புகழுமின் கூடலும் ஆமே!

### பதப்பொருள்:

வானப்பெரும் — வானத்தில் பெரிய மேகங்களிருந்து பொழியும் மழை
கொண்டல் — கொண்டல் என்றால் கொள்ளுதல், அதாவது வாழ்வதற்கு உயிரினங்கள் கொள்கின்ற.
மால் — திருமால்
அயன் — பிரமன்
வானவர் — தேவர்கள்
ஊனப்பிறவி — பிறவிக் குற்றங்களான மாயையை
ஒழிக்கும் — அழிக்கும்
ஒருவனை — சிவனை
கானக்களிறு — காட்டு யானை
கதற பிளந்த — யானை கதறப் பிளந்த
என் கோனை — என் தலைவனை
புகழுமின் —-நாம் புகழ்ந்தும், ஏத்தியும் வழிபட்டால்
கூடலும் ஆமே! — அவனுடன் இரண்டறக் கலக்கலாமே!

### சாரம்:

வானத்திலிருந்து பெரிய மேகங்கள் எவ்வாறு வித்தியாசம் பாராமல் அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கு மழை பொழிகின்றதோ, அதேபோல இறைவனும் மாபெரும் கருணையுடன் திருமால் பிரமன் மற்றும் தேவர்களது பிறவிக் குற்றங்களான மாயையை வித்தியாசம் இன்றி அழித்து அவர்கள் உய்யுமாறு அருள் புரிகின்றான்.
மேலும் தன்னை அழிக்க முனிவர்கள் ஏவிய காட்டு யானையை காடுகள் அதிர, யானை கதறப்பிளந்து முனிவர்களது அறியாமையையும் நீக்கி அருள் புரிந்தான். அத்தகைய என் தலைவன் ஈசனை நாம் புகழ்ந்தும், ஏத்தும் வழிபட்டால் முத்தி அடையலாமே!

## விளக்கம்:

இப்பாட்டின் முக்கிய செய்தியாக நாம் காண்பது சிவனைத்தவிர பிற அனைத்து தெய்வங்கள் மற்றும் முனிவர்கள், தேவர்கள் முதலானோர் அனைவருக்கும் பிறவிகள் உண்டு என்றும் அவர்கள் எல்லாம் மாயை ஆகிய குற்றத்திற்கு உட்பட்டவர்கள் என்றும் அறியலாம். இவர்கள் அனைவரது குற்றங்களையும் அழித்து அருள்புரிபவன் ஈசன் ஒருவனே என்றும் அறிகிறோம்.
அதனால் தானே “அவனுக்கு ஒப்பார் பாரிலும் இல்லை” என்று பாடல் 5இல் திருமூலர் பாடுகிறார்.

அடுத்து சிவன் எட்டு வீரச்செயல்களை புரிந்ததாக புராணங்கள் கூறுகின்றன.
அதில் ஒன்று காட்டானையை பிளந்து அதன் தோலை உரித்து தன் மீது உடுத்திய கதை.
இதையும் இப்பாடலில் குறிப்பாகக்கூறுகிறார் திருமூலர். இந்த கதை கந்தபுராணத்தில் வருவதாக அறிகிறோம்.
ஒருமுறை ஆணவத்தில் சிக்குண்ட முனிவர்கள் சிலர், செருக்கு மிகுந்து, தங்களது மந்திரசக்தியால் இறைவனை கட்டுப்படுத்தலாம் என்று தவறாக எண்ணி, ஓர் வேள்வி செய்து தங்களது சக்தியால் ஓர் வலிமை மிக்க காட்டு யானையை உருவாக்கி, அதனை ஈசன் மீது ஏவி விட்டனர்.
அவனோ காடுகள் அதிர, யானை கதற, உமாதேவி உள்பட அனைத்து தேவர்களும் முனிவர்களும் நடுங்க யானையைப்பிளந்து அதன் தோலை உரித்து ஆடையாக அதனை அனிந்து, முனிவர்களின் அறியாமையை நீக்கி அவர்களுக்கும் அருள் புரிந்தான். இதலிருந்து ஈசனின் மாபெரும் கருணையை நாம் உணரலாம்.
இத்தகைய ஈசன் நமக்கும் அருள் புரிய மாட்டானா என்ன?
நாமும் அவனை ஏத்தியும், பாடியும், புகழ்ந்தும் வழிபட்டால் அவன் அருளால் முத்தி அடையலாம் என்கிறார் திருமூலர்.

குறிப்பு — சிவனது எட்டு வீரச்செயல்களை மையமாகக்கொண்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட தலங்கள்
எட்டு, தமிழ்நாட்டில் உள்ளன. அதில் காட்டானையை வதம் செய்ததை குறிக்கும் தலமாக திருவழுவூர் வீரட்டம் என்ற சிவன் தலம் நாகை மாவட்டத்தில் உள்ளது.

## சுருக்கம்:

நாம் ஈசனை தொடர்ந்து ஏத்தியும், பாடியும், புகழ்ந்தும் வழிபட்டால், நமது மலங்கள் நீங்கி, அவனுடன் இரண்டறக் கலக்கலாம்.

## சிந்தனைக்கு:

தாருகா வனத்து முனிவர்கள் போல ஒரு சிலர், தண்ணீர் 100 டிகிரி சூடு ஏறியவுடன் நீரானது ஆவியாவது போல, கருமமானது அதனுடைய பலனை தரும் பொழுது இடையில் இறைவன் எதற்கு? எனும் தத்துவத்தைக் கொண்டு உள்ளார்கள். ஆனால், கர்ம பலனை தருபவர் இறைவன் தான் என்பதை இவர்கள் அறிய மறுக்கிறார்கள். நாம் நமது சிவபெருமானை போற்றி- புகழ்ந்து, நீக்க முடியாத கர்ம வினையை நீக்குவதோடு மட்டுமல்லாமல்,

அவனோடு இரண்டறக் கலந்தும் இன்புறலாம்.

## மந்திரம் 22

மனதில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவ னென்னில்தான் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே!

### பிரித்து எழுதுதல்:

மனதில் எழுகின்ற மாய நன்னாடன்
நினைத்து அறிவன் என்னில் தான் நினைக்கிலர்
எனக்கு இறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழைக்க நின்றார் பக்கம் பேணி நின்றானே!

பதப்பொருள்:

மனதில் — நமது மனதில்
எழுகின்ற — உதிக்கின்ற
மாய — தீவினைகள் மாய
நன்னாடன் — நன்மையில் மட்டுமே நாட்டம் கொண்டவன், சிவன்
நினைத்தது — நாம் நினைத்ததை அனைத்தும்
அறிவன் — அறிவான்
என்னில் தான் நினைக்கிலர் — இருந்தும் மக்கள் இவற்றை நினைத்துப் பார்ப்பதில்லை
எனக்கு இறை அன்பிலன் என்பர் — இறைவன் தங்கள் மீது அன்பு செலுத்துவது
இல்லை என்பர்.
இறைவன் — சிவபெருமான்
பிழைக்க நின்றார் — தனது கருணையை உணர்ந்து, புலம்பாமல், வழிபட்டு முத்தி
நிலை அடைய முற்படும் அடியார்களுக்கு
பக்கம் பேணி நின்றானே —- உடனிருந்து துணைபுரிவான்.

சாரம்:

நமது மனதில் உதிக்கின்ற, தீவினைகள் மாய, நமது நன்மையில் மட்டுமே நாட்டம் கொண்ட சிவபெருமான், நாம் நினைத்ததை அனைத்தும் அறிவான். இருப்பினும் மக்கள் இவற்றை எல்லாம் நினைத்துப்பார்ப்பதில்லை. மாறாக, இறைவன் தங்கள் மீது அன்பு செலுத்துவது இல்லை என்பர். அவனது கருணையை உணர்ந்து, புலம்பாமல், அவனை வழிபட்டு முத்தி நிலை அடைய முற்படும் அடியார்களுக்கு, சிவபெருமான் உடனிருந்து துணைபுரிவான்.

விளக்கம்:

நம் மனது, உடலுக்குள் எங்கே இருக்கிறது? அது ஒரு உறுப்பா? அவ்வாறென்றால் அதன் இருப்பிடம் நமக்கு தெரியும். நமக்கு கண், மூக்கு காது போன்ற உறுப்புக்கள் எங்கே உள்ளன என்று அறிவோம். ஆனால் மனதைப்பொருத்தவரை எங்கு இருக்கிறது என்று எவராலும் கூறமுடியாது. மனம் மூலையுடன் சம்பந்தப்பட்டது என அறிவோம், ஆனால் அது மூலையில் இல்லை.
இதயத்திலும் இல்லை. என்ன ஆச்சர்யம்!

அப்படி  என்றால் மனம் எங்கே இருக்கிறது?
மனம் நமது உணர்ச்சிகளின் பிறப்பிடம். அது ஒரு அதிர்வு நிலை. அலை வடிவம் ( vibration). அதற்கு எல்லா உணர்வுகளும் அடக்கம். இன்பம், துன்பம், புத்துணர்ச்சி, சோர்வு, அன்பு, காழ்ப்பு, அகங்காரம், நினைவு, மறதி போன்றவை.
நம் எண்ணங்களுக்கு மனமும் ஓர் அடிப்படை. மனம் சுத்தம் எனில் எண்ணங்களும் சுத்தம், ஆக செயல்களும் சுத்தமாக இருக்கும்.
மனதிற்கு எல்லையற்ற ஆற்றல் உண்டு. அதை சரிவர கையாண்டால் பல செயற்கரிய செயல்களை செய்யலாம். தவறான அசுத்தமான மனது தீய எண்ணங்களை வெளிப்படுத்த, அதன் விளைவாக செயல்கள் துன்பங்களில் முடியும்.

நமது உணர்வுகள் உடல் முழுவதும் செல்லும். நாம் இன்ப நிலையில் இருக்கும் போது, அதை உடல் முழுவதும் உணரும். ரத்த அழுத்தம் சீராக இருக்கும். கோபம் ரத்த அழுத்தத்தை அதிகரிக்கும்.

ஆகவே இத்துனை சிறப்பு வாய்ந்த மனதை தன் இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்து, கருணையே வடிவான ஈசன் நமது மனதுள் உதிக்கிறான் என்கிறார் திருமூலர் இப்பாடலில். பாடல் 15இல் சிவன் நமது உடலுள் நிலைத்து நீதி வழங்குகிறான் என்றவர், இப்பாடலில் அவன் உடலுள் எங்கு குடியேறுகிறான் என்கிறார் திருமூலர். மற்றும் தீவினைகள் மாய, சிவன் நமக்கு நன்மையை மட்டுமே நாடுபவன், ஒருபோதும் தீமை ஏற்படுத்த விரும்பமாட்டான் என்கிறார் திருமூலர். நமக்கு ஏதேனும் தீயவை நிகழ்ந்து துன்பம் வரின் அதுவும் இறுதியில் நன்மையிலே முடியும். சிவன் நமது எண்ணங்கள் அனைத்தையும் அறிவான். அவன்  நம்முள் தானே இருக்கிறான்!
இவை எல்லாம் அறிந்தும் மக்கள் இவற்றை எண்ணிப்பார்க்காமல் அவனை குறை கூறுகின்றனர்.
இன்பம் வரும் காலம் அவர்களது முயற்சி என்றும், துன்பம் வரும் காலம் -  ஈசனுக்கு தங்கள் மேல் அன்பு இல்லை என்றும் குற்றம் சாட்டுகின்றனர்.

இது ஒருபுறம் இருக்க, யார் யார் அவனது அளவற்றக்கருணையை உணர்ந்து அவனைத்தொழுது முத்தி அடைய விருப்பம் கொள்கிறார்களோ அவர்களுக்குத் துணையாக நின்று அருள் புரிகிறான் சிவபெருமான்.

சுருக்கம்:
நமது மனதை இருப்பிடமாகக்கொண்ட ஈசனின் சிறப்புக்களை உணர்ந்து, வழிபட்டால், நமக்குத்துணையாக இருந்து அருள் புரிவான்.

### சிந்தனைக்கு:

உள்ளத்தில் உண்மை அன்போடு, உள்ளம் உருகி இறை நாமத்தை கூறினால்... எம்பெருமான் அதை அறிவான். அவன் பக்கம் சிவபெருமான் என்றென்றும் இருப்பான். இறைவன் நாமத்தை ஜெபிக்காதவர்கள் பக்கம் இறைவன் இருப்பதில்லை. இறைவன், நாமத்திலும் இருக்கின்றான். நாமத்தை சொல்பவர்களின் உள்ளத்திலும் இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றான்- என்று திருமூலர் கூறுகின்றார்.

## மந்திரம்  23

வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே!

## பிரித்து எழுதுதல்:

வல்லவன் வன்னிக்கு இறை இடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின்றானே!

## பதப்பொருள்:

வல்லவன் — வலிமைமிக்கவன்
வன்னிக்கு — நெருப்புக்கு
இறை — இறைவன்
வாரணம் — கடல்
இடை — நடுவே
நில்லென — இரு என்று
நிற்பித்த — நிறுத்தச்செய்த
நீதியுள் ஈசனை — என்றும் நீதியை உடைய ஈசனை
இல்லென — இல்லை என்று
வேண்டா — கூற வேண்டாம்
இறையவர் தம்முதல் — அனைத்து தெய்வங்களுக்கும் தலைவனான சிவன்
அல்லும் பகலும் — இரவும் பகலும்
அருளுகின்றானே — அனைத்து உயிரினங்களுக்கும் அருள் புரிகின்றானே!

## சாரம்:

ஆற்றல் மிக்க கடல் நீர் மிகுந்து, கடல் மட்டம் உயர்ந்து நிலத்தை மூழ்கடித்து, உயிரினங்களை அழிக்கா வண்ணம், வலிமைமிக்க நெருப்புக்கு இறைவனே!, கடல் நடுவே நில்! என்று ஆணையிட்டு, நிறுத்தச் செய்தவன் சிவபெருமான். அவன் என்றும் நீதியுள் நிற்பவன். இவ்வாறு நம்மைக் காக்கும் ஈசனை இல்லை என்று கூற வேண்டாம். அனைத்து தெய்வங்களுக்கும் தலைவனான சிவன் இரவும் பகலும் எல்லா உயிரினங்களுக்கும் அருள் புரிகின்றானே!

## விளக்கம்:

மிகுந்த ஆற்றல் படைத்த கடல் நீர், தனது கடல் மட்டத்தை உயர்த்தி, நிலத்தை மூழ்கடித்து, நம்மை அழிக்க வல்லது. நமக்கு உரிய பாதுகாப்பு அளிக்கும் வண்ணம், சிவபெருமான், வலிமை மிக்க நெருப்புக்கு இறைவனே!, கடல் நடுவே நில்! என்று ஆணையிட்டு, நிறுத்தினான். இதனால் கடல் மட்டம் என்றும் சீராக இருக்க, நாமும் பிற உயிரினங்களும் பாதுகாப்பாக வாழ்கிறோம். இந்த செய்தி புராணங்களில் கூறப்படுகிறது. இந்த நெருப்புக்கு இறைவன் பெயர் ‘வடவாமுகாக்கினி’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது பெண்குதிரை வடிவில் அமைந்துள்ளதாம். இச்செய்தியை திருமூலர் இப்பாட்டில் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு இறைவன் நாம் அறியாமலும் நமக்கு நீதி வழங்குகிறான், அவன் எப்பொழுதும் நீதியுள் நிற்பவன் என்கிறார் திருமூலர்.

நாம் கேட்காமலும் - நாம் உயிர் வாழத்தேவையானவை அறிந்து அருள் புரியும் ஈசனை இல்லை என்று சிலர் கூறுகிறார்களே! என வருத்தப்படுகிறார் திருமூலர். அவனது அருளை இப்பொழுதாவது உணர்ந்து இல்லை எனக்கூற வேண்டாம் என்கிறார்.
இதிலிருந்து எக்காலத்திலும் இறைவன் இல்லை எனும் கூட்டம் இருக்கிறது என்று நாம் அறிவோம்.

மேலும் நமது பாதுகாப்புக்காக வேண்டி, சிவன் இரவும் பகலும் நித்தமும் அருள் மழை பொழிகிறான்.
இனியாவது அவன் இல்லை என்று கூறாமல் அவனை ஏத்தி வழிபடுவோமாக.

## சுருக்கம்:

நாம் அறியாமலும் நம்மைப் பாதுகாப்பவன் சிவன். அவனை ஏத்தி வழிவடுவோம். அவன் இல்லை எனக்கூற வேண்டாம்.

## சிந்தனைக்கு:

ஒரு மகானிடம்- நாஸ்திகன் சென்று, இறைவன் இந்திந்த காரணத்தினால் இவ்வுலகில் இல்லை -- என்று அழகாக விஷயங்களை எடுத்துரைத்தான். .
அந்த மகானோ சிரித்த முகத்தோடு நாஸ்திகனை பார்த்துக் கொண்டிருந்தார்.
இறுதியில் நாஸ்திகன் கேட்டான்;- "இறைவன் இல்லை"- என்பதை இப்போது ஏற்றுக் கொள்கிறீர்கள் தானே! என்று.
.
அதற்கு மகான் கூறினார் :- ஆஹா! என்னே இறைவனின் மகிமை. 'இறைவன் இல்லை'-- என்று சொல்வதற்கு கூட 'இறைவன் இருந்தால் தான் முடியும்'—என்று கூறி சிரித்தார்.

# மந்திரம் 24

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் கேசெல்வ
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே!

## பிரித்து எழுதுதல்:

போற்றி இசைத்தும் புகழ்ந்தும் புனிதன் அடி
தேற்றுமின் என்றும்  சிவனடிக்கே செல்வம்
ஆற்றியது என்று மயலுற்ற சிந்தையை
மாற்றி நின்றார் வழி மன்னி நின்றானே!

## பதப்பொருள்:

புனிதன் அடி — தூய்மையான ஈசனது திருவடிகளை
போற்றி  —- போற்றியும்
இசைத்தும். — பாடல்கள், பண்ணுடன் பாடியும்
புகழ்ந்தும்   —- ஈசனது சிறப்புக்களைப்புகழ்ந்தும்
தேற்றுமின் — பிற சிவனடியார்களுக்கு தெளிவு படுத்தியும்
மயலுற்ற —- அறியாமையில் மும்மலங்களில் மயங்கிக்கிடக்கும்
சிந்தையை. — நமது எண்ணங்களை
மாற்றி —- மாற்றி
என்றும்  சிவனடிக்கே செல்வம் ஆற்றியது—- நம் செல்வங்கள் அனைத்தும் அவனது திருவடிக்கே சொந்தம்
என்று - என்று
நின்றார் வழி — தெளிவு பெற்று அதன்படி அறநெறியில் வாழ்பவர்கள்
மன்னி — நிலைத்து
நின்றானே!  — அவர்கள் உள்ளத்தில் நின்று அருள் புரிவானே!

## சாரம்:

தூய்மையான ஈசனது திருவடிகளைப்போற்றியும், சிவன் பாடல்களைப்பண்ணுடன் பாடியும், ஈசனது சிறப்புக்களைப்புகழ்ந்தும், பிற சிவனடியார்களுக்கு இவற்றை தெளிவு படுத்தியும், அறியாமையில் மும்மலங்களில் மயங்கிக்கிடக்கும் நமது எண்ணங்களை மாற்றி, நம் செல்வங்கள் அனைத்தும் ஈசனது திருவடிக்கே சொந்தம் என்று தெளிவு பெற்று அதன்படி அறநெறியில் வாழ்பவர்கள் உள்ளத்தில் சிவன் நிலைத்து நின்று அருள் புரிவானே!

## விளக்கம்:

சிவன் உமது உள்ளத்தில் புகுந்து அருள் புரிய வேண்டுமா?.
கீழ்கண்டவற்றைச்செய் என்கிறார் திருமூலர்.

1. புனிதமான அவன் திருவடிகளைப்பற்றி போற்றவேண்டும். இதைத்தான் மணிவாசகர் சிவபுராணத்தில் “ஈசனடி போற்றி, எந்தையடி போற்றி, … சிவன் சேவடி போற்றி”  என்று பாடினாரோ?. மேலும் திருவாசகத்தில் போற்றித்திருஅகவல் என்று அகவலே இருக்கிறது. இவற்றின் உதவியுடன் ஈசனைப்போற்றலாம்.

2. அடுத்து சிவன் மீது அருளாளர்கள் பாடிய பாடல்களை தமிழுக்கே உரித்தான பண்ணுடன் பாட வேண்டும். தேவாரம், திருவாசகம், திருமந்திரம், போன்றவை.

3. பின்பு சிவனது சிறப்புப்பண்புகளை அறிந்து, அவற்றைப்புகழ வேண்டும். மேலும் இவற்றை பிற அடியார்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். கருணையே வடிவானவன், ஆதியும் அந்தமும் இல்லாதவன், பிறப்பு இறப்பு அற்றவன், வினைகளுக்கு அப்பாற்ப்பட்டவன், அளவற்றவன், ஒப்பில்லாதவன், தாயை விட அன்பானவன், எல்லையிலாதான், மாசற்றவன், என்றெல்லாம் கற்றோமே!, அவற்றைப்புகழ்ந்து பரப்ப வேண்டும்.

4. நாம் இதுவரை அறியாமையினால் மும்மலங்களுக்குள் அகப்பட்டு ஆணவம், கன்மம், மற்றும் மாயையில் சிக்கி, எது உண்மை என்று அறியாது, சுழல்கிறோம். இவற்றை உணர்ந்து, எல்லாம் ஈசனே என்று அவன் திருவடிகளைப்பற்றி, நமது சிந்தையை மாற்றி, நாம் ஈட்டும் செல்வங்கள் அனைத்தும் அவனுக்கே சொந்தம் என்று உணர்ந்து, அறவழியில் செல்ல முற்பட வேண்டும்.

இவ்வாறு செய்யின், சிவன் மகிழ்ந்து, நமது உள்ளத்தில் புகுந்து நிலைத்து நின்று கட்டாயம் அருள் புரிவான் என்கிறார் திருமூலர்.

## சுருக்கம்:

ஈசனது திருவடிகளில் சரண் அடைந்து, அவனைப்போற்றியும், பாடியும், புகழ்ந்தும், 'எனது' என்ற அகந்தையை விட்டு, எல்லாம் 'அவனது' என்ற எண்ணத்துடன், அறவழியில் நடவீர். ஈசன் அருள் கிட்டும்.

## சிந்தனைக்கு:

புனிதன் திருவடியை போற்றி, இசைத்து, புகழ் பாடினால் நம் மனமும் புனிதமாகும். அப்பொழுது உலகத்து செல்வமும்- பொருளும்- புகழும் சாரமற்ற சக்கையைப் போல நமக்கு காட்சியளிக்கும். இப்படிப்பட்டவனுக்கு உலகம் இயல்பாகவே காட்சி பொருளாக மட்டுமே காட்சியளிக்கும்.

ஒருவேளை போற்றி புகழ் பாடுவது உலகத்தின் சுக போகத்திற்காக என்றால் அதையும் இறைவன் கொடுத்த அருளுவான். நமக்கு எது தேவை என்பதை 'நோக்கமாக'க் கொண்டு இறைவன் புகழ் பாடுவோம்.

# மந்திரம் 25

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே.

### பிரித்து எழுதுதல்:

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னை தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே!

### பதப்பொருள்:

பிறப்பிலி — பிறப்பு இல்லாதவன்
பிஞ்ஞகன் — பின்னிய சடைமுடி உடையவன் அல்லது யாவற்றையும் ஒடுக்குபவன்
பேரருளாளன் — பேரருள் புரிபவன், சிவபெருமான்
இறப்பிலி — இறப்பும் இல்லாதவன்
துறப்பிலி — இடைவிடாது அல்லது நீங்காது
யாவர்க்கும் — அனைவருக்கும்
இன்பம் — ஆனந்தம்
அருளும் — அருள்கின்ற
தன்னை — சிவனை
தொழுமின் — தொழுவோம்
தொழுதால் — அவ்வாறு தொழுதால்
மறப்பிலி — சிவனை மறவாதவராய்
மாயா —- நமது மாயா மயக்கம் நீங்க
விருத்தமும் ஆமே —- ஞானம் அல்லது அறிவு பெறலாமே!

### சாரம்:

பிறப்பு இல்லாதவனும், பின்னிய சடைமுடி உடையவனும்,பேரருள் புரிபவனும், இறப்பும் இல்லாதவனும் ஆன சிவபெருமான் இடைவிடாது அல்லது நீங்காது அனைவருக்கும் ஆனந்தம் அருள்கின்றவன். அவனைத்தொழுவோம். அவ்வாறு தொழுதால் நாம் சிவனை மறவாதவராய், நம் மாயா மயக்கம் நீங்க ஞானம் அல்லது அறிவு பெறலாமே!

### விளக்கம்:

ஒருவனின் பிறப்பும் - இறப்பும் வினைப்பயனை சார்ந்தவை. ஈசனது செயல்கள் அனைத்தும் விருப்பு - வெறுப்பு அற்றவை, ஆகவே வினைகள் சாராதவை, ஆக ஈசன் பிறப்பும் - இறப்பும் அற்றவன்.
சிவபெருமானது எட்டு குணங்களில் ஒன்று, அவன் பிறப்பும் - இறப்பும் இல்லாதவன் என்பது. அதை இப்பாடலில் சுட்டிக்காட்டுகிறார் திருமூலர். இதையே “ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெரும் சோதி” என்று மணிவாசகர் திருவெம்பாவையில் பாடுகிறார்.
இந்த தனிப்பெரும் சிறப்பினால் வினைகள் சார்ந்த உயிரினங்கள் அனைத்தின் பிறப்பையும் இறப்பையும் நிர்ணயிக்கும் பண்பையும் உடையவன் ஆகிறான் சிவன். ஆக யாவற்றையும் ஒடுக்கும் ஆற்றலும் உடையவன் ஆகிறான். இதனால் பிஞ்ஞகன் என்று பெயரும் பெறுகிறான் ஈசன். இதுவும் இப்பாடலில் குறிப்பிடுகிறார் திருமூலர்.

அத்துடன் உயிரினங்கள் அனைத்துக்கும் பேரருள் புரிபவனும் அவனே என்கிறார், மேலும் மக்கள் அனைவருக்கும் நீங்காது ஆனந்தம் அளிப்பவனும் அவனே என்கிறார் திருமூலர். இதையே “ இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்”, என்றும் “ அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்” என்றும் மணிவாசகர் பாடுகிறார். இத்துணை சிறப்புகள் மிகுந்த சிவபெருமானை வணங்குமாறு வேண்டுகிறார் திருமூலர்.
அவ்வாறு வணங்கிவந்தால் நமது மயக்கமும் மாயையும் விலகும் என்றும் , நாம் சிவனை மறவாதவனாய் ஞானம் பெறலாம் என்கிறார் திருமூலர்.

ஏன் மறவாதவனாய் என்கிறார்?
காரணம் தேவர்கள் ஈசனை எண்ணத்திலும் நினைப்பதில்லை என்று பாடல் **13**இல் கூறுகிறார். அதே போல் பாடல்**22**இல் நாம் நினைப்பது அனைத்தும் ஈசன் அறிவான் ஆயினும் நாம் அவனை நினைப்பதில்லை என்றும் பாடுகிறார் திருமூலர். ஆகவே அவனை வணங்கி வந்தால் நாமும் அவனை மறவாதவனாய் அருள் பெறலாம் என்கிறார் திருமூலர்.

## சுருக்கம்:

நாம் ஈசனை வணங்கி வந்தால் நமது மயக்கம் தீரும், அறிவு புலப்படும், ஈசனை மறவாத தன்மையும் பெறுவோம்.

## சிந்தனைக்கு:

பள்ளி தலங்கள் அனைத்தும் கோவில் செய்குவோம்- என்றான் பாரதி.
இல்லம் கோவிலாக வேண்டும் என்றார்கள் சான்றோர்கள்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் என்றார் நம் திருமூலர். "உள்ளம் ஆலயமாக" வேண்டுமென்றால் பிறப்பில்லாதவன் -பிறப்பை அளி(ழி)ப்பான். பந்தப்படாதவன்- பந்தத்தை அளி(ழி)ப்பான். இறப்பில்லாதவன் இறப்பை அளி(ழி)ப்பான் என்று இப்படிப் பட்ட கருணை உள்ள சிவபெருமானை உளமாறத் தொழுதால் போதும். நமக்கு வீடு பேற்றை அளிப்பான்.